பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

Registered as a Newspaper பக்கங்கள்: 6

விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

## பெண்களின் சராசரி ஆயுட்காலம் ஆண்களினதிலும் 5வருடங்கள் அதிகம்

இலங்கையில் தற்பொழுது ஆண்களின் சராசரி ஆயுட் காலம் 70 . 1 வருடங்களாக
வும் பெண்களின் சராசரி ஆயுட் காலம் 74 8 வருடங்களாகவும் இருந்து வருகிறது
1946 - 1981 வருட காலப்பகுதியில் ஆண்களின் சராசரி ஆயுட்காலம் 21 வருடங்களா
லும், பெண்களின் சராசரி ஆயுட்காலம் 27வருடங்களாலும் அதிகரித்து உள்ளது.
1920 இல் ஆண்களின் ஆயுட்காலம் பெண்களின் ஆயுட்காலத்திலும் பார்க்க இரண்டு
வருடங்களாக இருந்துவந்தது, தற்போது பெண்களின் சராசரி ஆயுட்காலம் ஆண்
களின் சராசரி ஆயுட்காலத்திலும் ஐந்து வருடங்கள் அதிகமாக காணப்படுகிறது.
இத்தகவல்களை கலாநிதி இந்திரால்டி சில்வா தனது ''சுகாதார பராமரிப்பு ' எனும்
ஆய்வில் குறிப்பிட்டுள்ளார். (05)

24 - 12 - 94 சனிக்கிழமை ஓசை 309

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 09

யாழ். போதனா மருத்துவமனையில்

## சிகிச்சை பெற்றுவந்தவர் மாடியால் வீழ்ந்து காயம்

(யாழ்ப்பாணம்)

தைபோயிட் காய்ச்சலுக்கு இலக்காகி யாழ் போதனா மருத்துவமனை எட்டாம் இலக்க சிகிச்சைக் களத்தில் சிகிச்சைபெற்றுவந்தவர்மாடி கட்டடத்தில் இருந்து தவறி·கீழே வீழ்ந்ததில் படுகாயத்துக்கிலக்கானார்.

இருபாலையைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை (வயது 34) என்பவரே இவ்வாறு மாடியில் இருந்து தரையில் வீழ்ந்ததில் படுகாயமடைந்தவராவார்.

இவர் மூன்று நாட்கள் மேற்படி மேல்மாடியில் உள்ள எட்டாம் இலக்க சிகிச்சைக்களத்தில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வந்தார். நேற்று முன்தினம் இரவு மாடியில் இருந்து கீழே வீழ்ந்த இவர் தலையில் பலத்த காயத்துக்குள்ளானதுடன் கால் ஒன்றும் முறிவடைந்தது.

மேற்படி நபர் எவ்வாறு மாடியில் இருந்து கீழே வீழ்ந்தார் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

படுகாயத்துக்குள்ளான இந் நோயாளி தற்போது ஆபத்தான நிலையில் 24ஆம் இலக்க சிகிச்சைக்களத்தில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (சி)

## முன்னாள்அரசஅதிபருக்கு நிதி அமைச்சில் பதவி

(யாழ்ப்பாணம்)

நிதி திட்டமிடல் அமைச்சின் அனுசரணையுடன் இயங்கும் கொள்கை ஆய்வு நிலையத்தில் பிராந்திய ஆலோசகராக யாழ் மாவட்டத்தின் முன்னாள் அரச அதிபர் மாணிக்கவாசகர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் முற்பகுதியுடன் அரச அதிபர் பதவியில் இருந்து இவர் ஓய்வு பெற்றது தெரிந்ததே.

நிதி திட்டமிடல் அமைச்சின் அனுசரணையுடன் இயங்கும் கொள்கை ஆய்வு நிலையத்தில் பிராந்திய ஆலோசகராக நியமனம் பெற்றுள்ளார்.

மேலும் சிறிலங்கா அரசாங்கத்தின் இனவிவகார அமைச்சு முழுமையாக அமைக்கப்பட்டதும் அவ் அமைச்சின் செயலாளராக நியமிக்கப்படலாம் எனவும் கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ,தி)

## இலங்கை தாதியர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு

அமைச்சர் பௌசி தெரிவிப்பு

# கடற்படைக் கப்பலான 'டாறா' முல்லைகடற்பரப்பில்மூழ்கிறது?

## காங்கேசனில் இருந்து சென்றது

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படைக் கப்பலான 'டாறா' மூழ்கிக்கொண்டிருப்பதாக நம்பகரமான செய்தி ஒன்று தெரிவிக்கின்றது. நேற்றுமுன்தினம் காங்கேசன்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கிவிட்டு திருமலை திரும்பிக்கொண்டிருந்த இக் கப்பலே மூழ்குவதாகத் தெரியவருகின்றது.

நேற்று முன்தினம் நண்பகல் மூழ்கிக்கொண்டிருக்கும் கடற்படைக்குச் சொந்தமான இக் கப்பல் 500 தொன் எடையுள்ள பொருள்களை ஏற்றிச் செல்லக்கூடியதாகும்.

இக் கப்பல் மூழ்குவது குறித்து நேற்று செய்தி வெளியிட்டுள்ள 'லங்காதீப' பத்திரிகை, நேற்று முன்தினம் காங்கேசன்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கிவிட்டு திருகோணமலை நோக்கிச் சென்றுகொண்டிருக்கையில் முல்லைத்தீவு கடற் பகுதியில் கப்பல் மூழ்கிக்கொண்டிருப்பதாகவும் இக் கப்பலுக்கு என்ன நடந்தது என்பது குறித்து தெளிவாக தெரியவரவில்லை எனக் கூறுகிறது.

இதேவேளை கொழும்பிலிருந்து, திருகோணமலை துறைமுகம், காங்கேசன்துறை துறைமுகம் என்பவற்றுடன் தொடர்பு கொண்டபோதும் கப்பல் குறித்து எவ்வித தகவல்களையும் பெற முடியவில்லை எனவும் அப் பத்திரிகை கூறுகிறது.

மூழ்கிக்கொண்டிருக்கும் இக் கப்பலை மீட்கும் பொருட்டு விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் கப்பல்உலங்குவானூர்திமூலம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டுவருவதாகவும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சமாதான பேச்சுக்களை ஊக்குவிக்க எட்டுப்பேர்கொண்ட ஆலோசனைகுழு

அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயால் அமைப்பு

(கொழும்பு) ... அமைத்துள்ளார். ... தெரிவிக்கப்பட்டது சமா...

அவுஸ்திரேலியாவிலிருந்து திரும்பியவர்

## வவுனியா இரவு ரயிலில் பொருளை பறிகொடுத்தார்

[வவுனியா]

கொழும்பு-வவுனியா இரவு தபால் புகையிரதத்தில் கொள்ளையர் கைவரிசை தொடர்ந்தும் இடம்பெற்று வருகிறது.

கடந்த வாரம் இரவு அவுஸ்திரேலியாவிலிருந்துதிரும்பிய பல்கலைக்கழக நிர்வாகி ஒருவரின் 2 லட்சத்து 66ஆயிரம்ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன. ரயில் மாகோ சந்தியில் நின்றபோது இருந்த பை (பாக்) அனுராதபுரத்தில் வந்து பார்த்த போதுமாயமாகி விட்டதாம்.

பாக்கிற்குள் கமெராக்கள், கடிகாரங்கள் இருந்துள்ளன. இச் சம்பவம் தொடர்பாக அவர் வவுனியா பொலிசில் புகார் செய்துள்ளார்.

## கொழும்புபல்கலைமாணவர் போராட்டம் கைவிடப்பட்டது

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழக மாணவர்கள் விடுதிவசதி கோரி நடத்திவந்த 10 நாள் போராட்டத்தை கைவிட்டுள்ளனர். அரச தரப்பு குழுவுடன் நீண்ட நேரம் நடந்த பேச்சுக்களின் பின் இம் முடிவு எடுக்கப்பட்டது.

முத்தையா வீதி ரீட் அவென்யூவில் உள்ள கட்டடம் ஒன்று, மற்றும் ஒரு பொதுக் ... டங்கள் அரசால் பொறுப்பேற்கப்பட்டு மாணவர்கள் விடுதிகளாகப்படவுள்ளது.

கலாசார அமைச்சுவளவில் இம்மாணவர்கள் கடந்த 10 தினங்களாக மறியல் போராட்டம் நடத்தி வந்தனர்.

மாணவர் விடுதிப் பிரச்சினையை தீர்க்க அடுத்தாண்டு அரசு 19 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளதாக உயர்கல்வியமைச்சர் ரிட்சாட் பத்திரன ...

அமைச்சர் பௌசி தெரிவிப்பு

(கொழும்பு)
அரசாங்க வைத்தியசாலைகளில் கடமை புரியும் தாதிகளுக்கு வெளிநாடுகளில் வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க சுகாதார அமைச்சர் எச். எம். பௌசி முன்வந்துள்ளார்.
இதன் முதல் கட்டமாக சுமார் நூற்றிஐம்பது தாதிகளுக்கு மலேசியாவில் வேலை வாய்ப்பு செய்து கொடுக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள் வெளிநாட்டுக்கு செல்வதற்கு சுமார் மூன்று ஆண்டுகால விடுமுறை வழங்கப்பட இருப்பதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயால் அமைப்பு

[கொழும்பு]
சமாதானப் பேச்சுக்களை ஊக்குவிக்க உகந்த சூழ்நிலை உருவாக இனவிவகார தேசிய ஒருமைப்பாட்டு பிரதியமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே எட்டு உறுப்பினர் ஆலோசனைகுழு ஒன்றை அமைத்துள்ளார்.
சட்டத்தரணி குமாரசாமி வினோதன் தலைமையிலான இக் குழு சமாதானத்தின் தேவைகள் குறித்து மக்களுக்கு எடுத்து கூறும் என்றும் இது தொடர்பான கருத்தரங்குகளை நடத்தும் என்றும் தெரிவிக்கப்பட்டது சமாதான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும் அதேசமயம் யுத்தநிறுத்தம் அமுலாவதில் தாமதம் ஏற்படக் கூடாது என இக்குழுவின் தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

முடிவு எடுக்கப்பட்டது.
முந்தையா வீதி ரீட் அவென்யூவில் உள்ள கட்டடம் ஒன்று, மற்றும் ஒரு பொதுக் கட்டடம் என மூன்று கட்ட...

...அரசு 19 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளதாக உயர்கல்வியமைச்சர் ரிட்சாட் பத்திரன

(6ஆம் பக்கம் பார்க்க)

# கடனை மீளச் செலுத்தாத வர்த்தகர் மீது நடவடிக்கை

## புதிய அரசு தீர்மானம்

பத்துப் பன்னிரண்டு வருடங்களிற்கு மேலாக மக்கள் வங்கி, இலங்கை வங்கி அரசுக்குச் சொந்தமான வர்த்தக வங்கிகள் 300இற்கு மேலான வர்த்தக ஸ்தாபனங்களுக்கு 6000 மில்லியன் ரூபாவைக் கடனாக வழங்கியுள்ளது
இவ் வர்த்தக ஸ்தாபனங்கள் இதுவரையில் கடனை செலுத்தாது தப்பித்துக் கொண்டன மீண்டும் அரசியல் வாதிகளின் செல்வாக்கைப் பயன்படுத்தி கடனைப் பெற்றுள்ளனர்-
முன்னைய அரசு இக் கடனைப் பெறுவதற்கான சட்ட மூலத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த போதிலும் அதனை அமுல்படுத்தி நிறைவேற்றவில்லை.
புதிய அரசு கடன் செலுத்தாத வர்த்தக ஸ்தாபனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க தீர்மானித்துள்ளது.

# ஜனவரி இரண்டாம்வாரம் ரணிலின் திருமணம்

[கொழும்பு]
எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் திருமணம் ஜனவரி இரண்டாம் வாரத்தில் நடைபெறவுள்ளது. களனி பல்கலைக் கழக ஆங்கில விரிவுரையாளர்மைத்திரி விக்கிரமசிங்கவே ரணிலின் எதிர்கால மனைவியாவார்.

# மக்களின் எதிர்பார்ப்புகளை அரசு பூரணமாக நிறைவேற்றுமா?

## நம்பமுடியாதுள்ளது என்கிறார் வாசுதேவ

(கொழும்பு)
அரசு மக்களின் எதிர்பார்ப்புகளை பூரணமாக நிறைவேற்றும் என்பதை நம்பமுடியாமல்உள்ளது என வாசுதேவ நாணயகார தெரிவித்துள்ளார். நாவலப்பிட்டியில் நவசமசமாஜக் கட்சி ஏற்பாடு செய்த கருத்தரங்கில் பேசிய வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவிக்கையில், இப் புதிய அரசை பதவியில் அமர்த்த மக்கள் பெரிதும் முயன்றனர் நவசமசமாஜக்கட்சியும் அதற்கு உதவியது.
அரசு முன்பு உறுதியளித்தவற்றை நிறைவேற்றுமா? என்பதை இப்போது நம்ப முடியாமல் இருக்கிறது மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற அரசு என்ன நடவடிக்கைகளைஎடுக்கின்றது என்பதை அறிவிக்க வேண்டும் என்றார்.

பாப்பாண்டவர் வருகைக்கு

# 13 கோடி செலவு என்பது உண்மைக்கு மாறானது

[கொழும்பு]
பாப்பாண்டவரின் வருகையைத் தொடர்ந்து சிறிலங்கா அரசாங்கம் பதின்மூன்று கோடி ரூபா செலவு செய்ததாக கூறுவது முற்றிலும் உண்மைக்கு முரணானது என ஆயர் மன்றத் தலைவர் ஆயர் மெல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.
உண்மையிலே ஒரு கோடியே 30 லட்சம் ரூபா மட்டுமே செலவிடப்பட்டதாகவும் சுட்டிக்காட்டிய அவர் இச்செலவை அரசாங்கம் ஏற்பதாக முன்னர் ஒத்துக்கொண்டதாக குறிப்பிட்டார்.

## படகுச் சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## விண்ணப்பப்படிவம் ஒப்படைக்கவும்

தமிழீழ நிர்வாக சேவையில் பொதுசனப் பிரதிநிதித்துவமுடைய அமைப்புகளைப் பதிவு செய்வதற்கு விண்ணப்பப்படிவம் பெற்ற அனைவரும் அதனை உரிய முறையிற் பூரணப்படுத்தி எதிர்வரும் 31-12-94க்கு முன் ஒப்படைக்குமாறும் சனசமூக நிலையம், கிராம அபிவிருத்

(6ஆம் பக்கம் பார்க்க)

# பாஜ்களின் தொகையை அதிகரிக்காது பொருள்கள் விரைந்து இறக்கமுடியாது

## செயலக வட்டாரங்கள் தகவல்

(யாழ்ப்பாணம்)
வடபகுதிக்கு அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிவருவதற்கு கப்பல் வசதிகள் அதிகரிக்கப்பட்டாலும் புதியபாஜ்கள் கொண்டு வரப்பட்டாலே பொருள்களை விரைவாக இறக்கி விநியோகிக்க முடியும் இவ்வாறு செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன
கப்பலில் இருந்து பொருள்களை இறக்க பயன்படும் பாஜ்கள் போதியளவு இல்லாததினால் பொருள்களை விரைவாக இறக்க முடியாமல் உள்ளது.
பருத்தித்துறை துறைமுகத்தில் ஐந்து பாஜ்கள் இருந்த போதிலும் இதில இரண்டே சேவையிலீடுபடக் கூடியதாக இருக்கின்றது,
இந்நிலையில் பாஜ்களையே முதலில் கொண்டுவர வேண்டிய அவசியம் உள்ளது.
புதிய பாஜ்களை கொண்டு வராமல் புதிய கப்பல்களை சேவையில் ஈடுபடுத்தினாலும் விநியோகம் சீரடைய வாய்ப்பில்லை.
புதிய கப்பல் சேவையை ஏற்படுத்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கையோடு

(6ஆம் பக்கம் பார்க்க)

## துரோகி சுட்டுக் கொலை

திருகோணமலை மாவட்டம் கறுக்காமுனை என்னுமிடத்தில் அண்ணாச்சி என்ற துரோகி ஒருவர் விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.
கடந்த 19-ம் திகதி இரவு சுட்டுக் கொல்லப்பட்ட மேற்படி நபர் விடுதலைப் புலிகளால் தீவிரமாகத் தேடப்பட்டு வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சுவிஸில் 35,000 இலங்கை தமிழரில் 33பேருக்குமட்டும் அரசியல் புகலிடம்

(பேர்ன்)
சுவிட்சர்லாந்தில் அரசியல் தஞ்சம் கோரி இதுவரை 35,000 இலங்கைத் தமிழர்கள் விண்ணப்பம் செய்துள்ளனர்.
இவர்களில் சுமார் 3,500 பேரின் விண்ணப்பங்களே பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. சுவிஸில் அரசியல் புகலிடம் கோரி விண்ணப்பித்த இலங்கைத் தமிழர்களில் 33 பேருக்கு மட்டுமே சுவிஸ் அரசு அரசியல் புகலிடம் வழங்கியுள்ளது.
மேலும்சுவிட்சர்லாந்தில் அரசியல் புகலிடம்கோரி கிடைக்காதவர்களை திருப்பி அனுப்புவது தொடர்பாகவும் சிலருக்கு தற்காலிக புகலிடம் வழங்குவதுகுறித்தும்சுவிட்சர்லாந்து அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

(27)

# ஆசிரியர் சம்பள கட்டுநிதி இன்னமும் எடுத்து வரவில்லை

(யாழ்ப்பாணம்)
ஆசிரியர்களின் டிசம்பர் மாத சம்பளத்துக்குரிய கட்டுநிதி இன்னமும் யாழ் கல்வித்திணைக்களத்துக்கு எடுத்துவரப்படவில்லை.
டிசம்பர் மாத சம்பளக் கொடுப்பனவுகள் பண்டிகைக் காலங்களை ஒட்டி - நேரகாலத்துடன் வழங்கப்பட்டு வருதல் வழமையான நிலையில் - இதுவரை சம்பளம் கிடைக்காமை குறித்து ஆசிரி

(6ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### இறைச்சிக்கோழி விற்பனை

இறைச்சிக்கோழி குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. எந்நேரமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:- 698/15 சபாபதி வீதி தலையாழி, வைரவர் கோவிலுக்கண்மையில், யாழ். [10442]

### தவறிவிட்டது

பருத்தித்துறை வீதியில் சட்டநாதர் கோவிலுக்கும் மூன்றாம் கட்டை சந்திக்கும் இடையே கைச்சங்கிலி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தோர் தயவுசெய்து ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் தரப்படும். (சி 10997)

### புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

ஆண்டு 3 முதல் 11 வரை சகல பாடங்களும் ஆரம்பமாகியுள்ளன. 5க்கான புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள் 25-12-94 இல் வெளியிடப்படும் ஆண்டு 6 முதல் 11வரையான வினாத்தாள் 31-12-94 இல் வெளியிடப்படும் தேவையானோர் தொடர்பு கொள்ளவும். புதிய கல்வி நிலையம். 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (10483)

### மாட்டெரு

மாட்டெரு விற்பனைக்குண்டு. தொடர்பு - மில்க்வைற் (சி-10999)

### மில்க்வைற் சலவைத்தூள்

மில்க்வைற் சலவைத்தூளின் சக்தி மிக்க நுரைவளம் துணிகளிலிருந்து அழுக்கை நுண்ணியதாக அகற்றுகிறது- சலவையைத் துரிதப்படுத்துகிறது. பளிச்சிடும் வெண்மை ஒளிர்ந்திடும் வண்ணம் 50 கிறாம் பக்கற் ரூ. 6/-, 450 கிறாம் பெட்டி ரூ. 45/-. வெற்றுப்பக்கற்றுக்கள் 25க்கு அப்பியாசக் கொப்பி. 100க்கு கைலேஞ்சி. 500க்கு துவாய் அன்பளிப்பு ''மில்க்வைற்'' (சி- 10998)

---

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம (வ. உ)

## கேள்வி அறிவித்தல்
## லொறி விற்பனை

சங்கானை ப.நோ.கூ. சங்கத்திற்குச் சொந்தமான த1-4254 (24/8394) இலக்க மொறீஸ் நோமல் லொறியை விற்பனை செய்வதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விக்கான விண்ணப்பப் பத்திரங்கள் மேற்படி சங்கத்தில் ரூபா 50/- கட்டணமாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். மீளளிப்பு வைப்புக்கட்டணமாக ரூபா 1000/- செலுத்தப்படல் வேண்டும். கூடிய கேள்விக்காரருக்கு லொறியை விற்பனைசெய்வதுடன், இது தொடர்பான இறுதி முடிவு எடுக்கும் பொறுப்பு சங்கத்தின் பணிப்பாளர் சபைக்கு உண்டு. லொறியை பார்வையிட விரும்புவோர் சங்க அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாவும் 6-1-95-ம் திகதி பி. ப. 4-00 மணிக்கு முன்னதாக ''தலைவர், சங்கானை ப நோ. கூ. சங்கம், சங்கானை'' என விலாசமிடப்பட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''த1 - 4254 (24/8394) இலக்க வாகனத்திற்கான கேள்விப் பத்திரம்'' என குறிப்பிட்டு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

சங்கானை, - பொதுமுகாமையாளர்
22-12-94.

(சி-10996)

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
01- 05- 1952

உதிர்வு
24- 12- 1992



### அமரர் திரு. பொ. குணராசா

குணத்தின் குல விளக்கே- உன்
மனைவி மகன் உள்ளம் கலங்குதையா
தாயுள்ளம் தனையன் இன்றி தவிக்குதையா
சகோதரர் தலைமை இன்றி தத்தளிக்கிறார்கள்
மைத்துனர் நட்பு கொள்ள மனம் வருந்துகிறார்கள்
மருமக்கள் மாமா என்று தினம் கலங்குகிறார்கள்
மகன் வளர்ந்து அப்பா என்றழுதால் - நான்
என்னவார்த்தை உரைப்பேன் ஐயா
நீர் பிரிந்து ஈராண்டு சென்றாலும் - உமது
பாச மனங்கள் உம் நினைவை மீட்டுமையா

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

மனைவி - மகன்
புத்தூர் வடக்கு, சகோதரர்கள், மருமக்கள்
புத்தூர் (10477)

---

## ஆண்டு விழாவும் கௌரவிப்பும்

(தொல்புரம்)

சங்கானை வட்ட செஞ்சுடர் கலைக் கழகத்தின் இரண்டாவது ஆண்டு விழாவும், நடப்பு ஆண்டிற்கான கலைஞர்கள் கௌரவிப்பும் சிறப்பாக நடைபெறவுள்ளன.

கழகத் தலைவர் க. சதானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி விழாவானது 26 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் தொல்புரம் டச்சு வீதியில் உள்ள கழக அலுவலக மண்டபத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தை சேர்ந்வர்கள் சிறப்புரையாற்றவுள்ளனர். நிகழ்வின் இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (41)

## ஒளி விழா

(தொல்புரம்)

வலி தென்மேற்கு பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம் நடாத்தும் ''ஒளி விழா'' எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் 1. 00 மணியளவில்மேற்படி பிரதேச செயலக மண்டபத்தில் மேலதிக அரசாங்க அதிபரும், நலன்புரிச்சங்க போஷகருமான திரு. து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில்வரவேற்புரையை உதவிப் பிரதேச செயலர் செல்வி ரூபினி கனகரத்தினம் நிகழ்த்துவார். கிறிஸ்மஸ் செய்தியினை தென் இந்திய திருச்சபை ஆயர் அதிவண. கலாநிதி சு. ஜெபநேசன் வழங்குவார். விழாவின் இறுதியில் நாடகம், பாடல், வில்லிசை போன்ற கலைநிகழ்ச்சிகள் இடம் பெறும். (41)

---

## 3 ஆம் ஆண்டு நினைவாக

பிறப்பு
0?-06-1978

வீரச்சாவு
24-12-1991



### வீரவேங்கை இளம்பரிதி / ராவ்
### (கைலாயநாதன் சிவகணேஷன்)

46, சிவன்பண்ணை வீதி, கொட்டடி.

ஆசைக்கு ஒரு மகனாய் அவதரித்த
அன்பு ராஜா!
இளமை வயதினிலே இனவாதத்தை அழிக்கவென
நினைத்துச் சென்றாயோ இளம்பரிதி நீ- உன்
நினைவுச் சின்னம் என்றைக்கும் அழியாது - உன்
கனவும் நனவாக தமிழீழமும் மலரட்டும்.

இவருடன் வீரச்சாவைத் தழுவிய மாவீரர்களுக்கும் எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துகிறோம்.

உன் நினைவில் வாழும்,
அம்மா (சிவா), அக்கா (டிற்ரா)

தற்போதைய முகவரி;
இணுவில் மேற்கு,
இணுவில். (10470)

---

## 3-ம் ஆண்டுநீங்காதநினைவலைகள்



---

## நினைவு கூருகின்றோம்...

## 24.12.1994

1984-ம் ஆண்டு இதேதினத்தில் மணலாறு-ஒதியமலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய,

**அன்சராஸ்** (நமசிவாயம் கலையரசு-தென்னமரவடி -திருமலை)

**விக்கி** (கந்தையா ரவீந்திரன்-திரியாய் - திருமலை)

**தீசன்** (நல்லதம்பி விஜேந்திரன்-திரியாய்-திருமலை)

**இடிஅமீன்** (கணபதிப்பிள்ளை சிவலோகநாதன்-முல்லைத்தீவு வீதி, நெடுங்கேணி-மணலாறு)

**ரவி** (கனகராசா விக்னேஸ்வரன்-கொக்குத்தொடுவாய் -மணலாறு)

**வெள்ளை** (இ. சற்குணநாதன்-முள்ளியவளை - முல்லைத்தீவு)

**சந்துரு** (யோசப் பொன்னுத்துரை டொன்பொஸ்கோ-ஓமந்தை-வவுனியா)

**லெப்.காண்டீபன்-எம்.பி** (சுப்பிரமணியம் சிறிஸ்கந்தராசா-குமுழமுனை-மணலாறு)

1985-ம் ஆண்டு கல்லடி முகாம் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டு கொல்லப்பட்ட

★ **சத்தியன்** (எஸ். யோகராசா--கொம்மாந்துறை-மட்டு)

வந்தாறுமூலைப்பகுதியில் அதிரடிப்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**2-ம்லெப்.சகாதேவன்** (தர்மலிங்கம் கோகுலநாதன் - கொக்கட்டிச்சோலை-மட்டு)

1986-ம் ஆண்டு மட்டு - தாழங்குடாப் பகுதியில் தேசவிரோதிகள் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய.

**லத்தீப்** (முகம்மது அலியால் முகம்மது லத்தீப்-காத்தான்குடி-மட்டு)

**நரேன்** (ஏபிரகாம்லிங்கன் விஜயசுதன்-3-ம் குறுக்குத் தெரு, பாசையூர்-யாழ்)

மட்டு- ஆரையம்பதிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய-

**சுது** (சதானந்தன் நிர்மலநாத் - அரியாலை - யாழ்)

1987ஆம் ஆண்டு காரைநகரில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த-

**சேரன்** (கண்ணன் - கீரிமலை வீதி, சித்தங்கேணி-யாழ்)

1988ஆம் ஆண்டு கல்மடுவில் இந்தியப்படையினரின் மிதிவெடியில் சிக்கியதில் வீரச்சாவெய்திய-

**கூர்க்காஸ்** (அருள்பிரகாசம் நிக்சன்போல் -உருத்திரபுரம் - கிளிநொச்சி)

தேசவிரோதிகளால் கைதுசெய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான, காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலை உணவகப் பொறுப்பாளர்

**சந்திரகுமார்**

1990ஆம் ஆண்டு குப்பிளான் பகுதியில் வீரச்சாவெய்திய-

**ஜீவா** (மஞ்சுளா சிவபாதம்-செட்டிகுளம் - வவுனியா)

கட்டுவன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் விழுப்புண்ணடைந்து யாழ்போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவரும் போது வீரச்சாவெய்திய-

**நளினிகாந்தி** (கவிதா பழனிநாதன்- கொக்குத்தொடுவாய் - மணலாறு)

1991-ம் ஆண்டு மணலாறு-கொக்குத்தொடுவாய், கோவில்முனைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

---

## '3-ம் ஆண்டு நினைவஞ்சலி

''மில்க்வைற்'' (சி- 10998)　　புத்தூர்　　(10477)

# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்:

1973- 08- 01

வீரச்சாவு:

1991- 12- 24

## கப்டன் வாணன்

## (சண்முகலிங்கம் மோகனகுமார்)

உரும்பிராய்

தாயகம் தீயிலே வெந்ததுகண்டு
தலைவனின் அணியிலே இணைந்தாய்!
ஓயாது களத்திலே உழைத்தாய்
ஒப்பற்ற உயிர்தனை ஈந்தாய்!
நினைவுப் பூக்களைச் சூட்டி உன்னை
நெஞ்சில் சுமக்கிறோம் நாங்கள்!

இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது அஞ்சலிகள்.

தற்போதைய முகவரி:-
''நல்லலஷ்மி அவென்யூ''
கோவில் வீதி, நல்லூர்.　　(10484)

- அம்மா, அண்ணா,
தம்பிமார்கள்.

# 3-ம் ஆண்டுநீங்காதநினைவலைகள்



## வீரவேங்கை சந்துரு

செல்லையா சுகுமார் (காரைநகர்)

மண்ணில் முத்தாக
30-10-1971

தமிழீழ வித்தாக
24-12-1991

காரைநகர் தந்த தியாகச் செம்மலே
தாயை விட தமிழ் மண்ணை நேசித்தாய்.
எம்மண்ணிலே எதிரியின் கொட்டத்தை
அடக்கிட வரிப்புலியாகி நின்றாய்
நிச்சயம் உன் கனவு பலிக்கும்
நாள் வெகு தூரத்தில் இல்லை.

24-12-94 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்கள், சகபோராளிகளையும் அழைக்கின்றோம்.

16/18 விதானையார் வீதி,
ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்
(10480)

-குடும்பத்தினர்

**நளினிகாந்தி** (கவிதா பழனிநாதன்- கொக்குத்தொடுவாய் - மணலாறு)

1991-ம் ஆண்டு மணலாறு-கொக்குத்தொடுவாய், கோவில்முனைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**லெப். ராதா-தமிழரசன்** (சிவஞானம் கண்ணன்- 35-ம் கிராமம்-மட்டு)

**2-ம்லெப்.நிருசுதா** (சுசிலாதேவி சுப்பிரமணியம்- வட்டக்கச்சி- கிளிநொச்சி)

புன்னாலைக்கட்டுவன்-ஈவினைப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த,

**கப்டன் வாணன்** (சண்முகலிங்கம் மோகனகுமார் -உரும்பிராய் கிழக்கு-யாழ்)

**சீராளன்** (முருகேஸ்வரன் வரதன் (ரஞ்சன்) - பலகாடு, காரைநகர் - யாழ்)

**இளம்பரிதி-ராவ்** (கைலாயநாதன் சிவகணேசன்- சிவன்பண்ணை வீதி, கொட்டடி-யாழ்)

அச்சுவேலிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**சந்துரு** (செல்லையா சுகுமார் -ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளி - யாழ்)

ஐயங்கேணிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**சி- நிதி** (ஐயங்கேணி)

**த. பீதாம்பரம்** (ஐயங்கேணி)

1992-ம் ஆண்டு மணலாறு- கொக்குத்தொடுவாய் பகுதியில் ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவ அணி மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**லெப். மருதன் -வித்திரா** (மாணிக்கப்போடி அருட்சிவம் - முனைக்காடு - மட்டு)

**லெப்- இளங்கோ** (உலகசேகரம் உமாகுலேந்திரன் - ஐயங்கேணி-மட்டு)

**கப்டன் கரேந்திரன்** (ஆனந்தசாமி ஆனந்தராஜ் அன்புவழிபுரம் - திருமலை)

**லெப். அமுதன்** (சடையன் தர்மலிங்கம் - பன்குளம் - திருமலை)

**கப்டன் கல்கி** (தாமோதரம் ருக்குமணி -2-ம் வாய்க்கால் -கிளிநொச்சி)

**மேஜர் செங்கோலன்/செங்கோல்** (பொன்னுத்துரை பாலமுருகேசு-இயக்கச்சி)

**லெப். விதுரன் -விதுரராசன்** (கதிரவேல் கவந்ததீசன்-அல்வாய் தெற்கு-கரவெட்டி)

**ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.**

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10992)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளைநூலகம்.

# செலவினங்களைக் குறைக்குமாறு சந்திரிகா அமைச்சர்களுக்கு பணிப்பு

(கொழும்பு)

வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை சமாளிக்கும் முகமாக செலவினங்களில் பெருமளவைக் குறைக்கும்படி ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா தமது அமைச்சரவை உறுப்பினர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில், வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை சுமார் 6700 கோடி ரூபாவாக இருக்கலாம் எனவும், தற்போதைய வருடத்தில்இது5700 கோடிரூபாவாக இருக்கிறது எனவும் குறிப்பிட்டார். மாவு மற்றும் பாண் போன்றவற்றிற்கான அரசாங்க மானியம் தொடர்பாக மீள் பரிசீலனை செய்ய வேண்டி இருப்பதாகவும், உலக சந்தையில் கோதுமை விலை உயர்வின் காரணமாக மாவு விலையில் தற்சமயம் அரசு கிலோவொன்றுக்கு ரூ. 6.60 வரையில் இழக்கவேண்டி இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் அத்தியாவசிய பொருள்களின் விலைகளில் உயர்வு காணப்படுவதாக குற்றம் சாட்டப்படுகின்ற போதும், கடந்த வருடத்தில் நிலவிய விலைகளுடன் ஒப்பிடும்போது பெரிய வித்தியாசம் இல்லை எனவும், உலக சந்தையில் சீனி விலை அதிகரித்து இருப்பதாகவும் தெரிவித்தார்.

நாட்டின் எதிர்காலம் தனியார் மயமாக்கப்படுவது தொடரப்படுவதிலேயே தங்கியுள்ளது. எனினும் முன்னைய அரசாங்கம் பின்பற்றிய முறை இது விடயத்தில் தொடரப்படமாட்டாது.

அரசாங்க பாராளுமன்றக் குழு உறுப்பினர்கள் மத்தியில் பேசிய அவர் மேலும் கூறுகையில், தனியார் மயப்படுத்தும் தற்போதைய நடவடிக்கைகள் முற்றிலும் மறுசீரமைக்கப்பட்டு, கண்டிப்பான கேள்விப்பத்திரங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.

சமூக நலத்திட்டங்கள்மேற்கொள்ளப்படுவதனூடாக மக்களுக்கு பதில் சொல்லக்கூடிய நிலைமை உருவாக்கப்படவேண்டும் என்று இங்கு வாசுதேவ நாணயக்கார கருத்து தெரிவித்தார்.

எனினும், திறந்த பொருளாதாரக் கொள்கையும், தனியார் மயமாக்கப்படுவது தொடரப்படும் என்ற ஜனாதிபதியின் உறுதிப்பாட்டுக்கும் ஆர்வத்துக்கும் பாராட்டு தெரிவிப்பதாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினரான ரவி கருணாரத்ன தெரிவித்தார்.

## நிமிடத்திற்கு 48000 ரூபா செலவு

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு யுத்தத்துக்கென ஒரு நிமிடத்திற்கு நாற்பத்தெண்ணாயிரம் ரூபா செலவாகின்றது. என மாத்தறை மாவட்ட முன்னாள் பாரறளுமன்ற உறுப்பினரும் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபன தலைவருமான சிறிசேன தெரிவித்துள்ளார்.

## இராணுவ வாகனம் மோதி பாதசாரி பலி

(கொழும்பு)

குருநாகல் தம்புள்ள பிரதான வீதியில் இராணுவ வாகனம் ஒன்று மோதியதில் பாதசாரிகளில் ஒருவர் பலியானார். மேலும் மூவர் காயமடைந்தனர்.

# பௌத்தம் பற்றிய பாப்பரசர் கருத்துக்கு திருச்சபை மன்னிப்பு கோருகிறது

(கொழும்பு)

பாப்பரசர் புனித இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் எழுதியுள்ள நூலில் இடம்பெற்றுள்ள பௌத்தம் தொடர்பான தவறான கருத்துக்களுக்காக மன்னிப்புக் கோருவதாக இலங்கையின் கத்தோலிக்க திருச்சபை அறிவித்துள்ளது. வத்திக்கானிலுள்ள றோமன் கத்தோலிக்க திருச்சபையின் சார்பாக இவ் அறிக்கையை கொழும்பிலுள்ள அதிமேற்றிராணியார் மேதகு நீக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை வெளியிட்டுள்ளார்.

பாப்பரசர் இரண்டாம் அருளப்பர்சின்னப்பரினால் எழுதி வெளியிடப்பட்டுள்ள குறாஸ் திராஸ்கோல்ட் ஒவ்ஹொப் என்னும் புத்தகத்தில் இடம் பெற்றுள்ள பௌத்த மதம் தொடர்பான கருத்துக்கள் குறித்து சர்ச்சைகள் நிலவியதும் இதன்காரணமாக பாப்பரசரின்கொழும்பு விஜயத்தின் போது எதிர்ப்பு தெரிவிப்பது தொடர்பாகவும் பேசப்பட்டு வந்தமை தெரிந்ததே.

# குற்றவாளியாகக் காணப்படின் பொறுப்பு எதுவும் வழங்கப்படாது

- ரணில்விக்கிரமசிங்கா

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்டுள்ள தோல்வியை ஆவேசமாகக் கொண்டு கட்சியின் எதிர்கால வெற்றிக்காக திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். இன்றைய சூழலில் ஐ. தே. க.வை சேர்ந்த அனைவரும் கட்சியின் எதிர்கால வெற்றிக்காக ஒன்றுபட வேண்டும். இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், ஐ. தே. கவின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

கண்டியில் அண்மையில் நடைபெற்ற விசேட கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், ஐ. தே. க. நேர்மை இழந்த ஒரு கட்சியல்ல எவரும் தவறுகள் செய்வது இயற்கையே: ஆனால் எமது கட்சியைச் சேர்ந்த எவரும் ஜனாதிபதி ஆணைக் குழுவினால் குற்றவாளிகளென்று காணப்பட்டால் அவர்களுக்கு பொறுப்பான பதவிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது எனவும் குறிப்பிட்டார்.

அத்துடன் பொதுஜன ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்து மூன்று மாதங்களாகின்ற போதும்31 தொழில் வாய்ப்புகளைக்கூட ஏற்படுத்தவில்லை. எனினும் 31ஆணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டுவிட்டன எனவும் அவர் குறிப்பிட்டார்.

# ஆசிய அபிவிருத்திவங்கியின் நிதி உதவிகள் நிறுத்தம்

(கொழும்பு)

முன்னைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் நிதியுதவிகளை தவறான முறையில் பயன்படுத்தியதன் காரணமாக ஆசிய அபிவிருத்தி வங்கி தனது நிதியுதவிகளை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதென நிதியமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நிதியுதவிகளை ஆடம்பர நிகழ்ச்சிகளுக்கு பயன்படுத்தியமையால் 1993இல் 200 மில்லியன் டொலராகஇருந்த நிதியுதவி 1994இல் 109 மில்லியன் டொலராக குறைக்கப்பட்டதாகவும் அவ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

# மூன்றாவது கணவனையும் விபத்தில் இழந்து விட்டேன்

-மரணவிசாரணையில் சாட்சியம்

(கொழும்பு)

எனது முதலாவது கணவர் பூப்பறிப்பதற்காக குளத்தில் இறங்கிய போது நீரில் மூழ்கி மரணமானார்.இரண்டாவது கணவர் வாகன விபத்தில் சிக்கி உயிரிழந்தார். திருமணமாகி இரண்டு மாதத்தில் இப்போது மூன்றாவது கணவனும் ஜிப்பினால் மோதுண்டு மரணமாகி விட்டார்.இவ்வாறு வாகனத்தால் மோதுண்டு மரணமான எம்.ராமசாமியின் மரணவிசாரணையின் போது அவரது மனைவியான தாய்ரா (34 வயது) கண்ணீர் மல்கிய நிலையில் கூறினார்.

கொழும்பு-காலி வீதியில் சிரேஷ்ட பொலிஸ் ஒருவர் பயணம் செய்த வாகனம் ஒன்றினால் மோதுண்ட இவர் நாகொட வைத்தியசாலையில் மரணமானார்.

அங்கு நடைபெற்ற மரண விசாரணையில் அவரது மனைவி மேலும் கூறுகையில் கொழும்பு - காலி பாதையில் யாரோ வாகனத்தால் மோதுண்டு கிடப்பதாக அறிந்து அங்கு சென்றேன் எனது கணவனே அங்கு மோதுண்டு கிடந்தார். அவரை உடனே நாகொட வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்றேன் மதுப் பழக்கம் உடையவரான அவர் சம்பவ தினத்தன்றும் மது அருந்தி இருந்தார் எனவும் குறிப்பிட்டார்.என்னைப் போன்ற துரதிர்ஷ்டசாலி உலகில்வேறு எவரும் இருக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

# புலிகளின் ஆயுதங்கள் தொடர்பாக விழிப்புடன் இருக்க வேண்டும்

## முன்னாள் சபாநாயகர் முகமது கோரிக்கை

யுத்த நிறுத்தம் ஏற்படுவதை நான் வரவேற்கிறேன். ஆனால் ஆயுதங்கள் தொடர்பாக விழிப்புடன் இருத்தல் வேண்டும். இவ்வாறு முன்னாள் சபாநாயகரும், ஐ. தே.க. எம்பியுமான எம். எச். முகமது கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் பாதுகாப்பு வரி அறவீடு திருத்த சட்டம் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், வட அயர்லாந்து கிளர்ச்சித் தலைவர் சின்பென்னுடன் பேச்சுவார்த்தை மேசையில் அமருவதானால் ஆயுதங்கள் அனைத்தும்அழித்தொழிக்கப்பட வேண்டும் என பிரிட்டன் பிரதமர் ஜோன் மேயர் கூறியுள்ளார். புலிகளுடனான பேச்சுவார்த்தையில் கடந்த கால அனுபவத்தையும் கவனத்திற்கு எடுக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

# கம்பனி வங்கிக் கணக்கு மத்திய வங்கியால் முடக்கம்

(கொழும்பு)

கோடிக்கணக்கானடொலர் வெளிநாட்டுச் செலாவணி மோசடியை செய்துள்ளதாக சொல்லப்படும் கம்பனி ஒன்றின் வங்கிக் கணக்குகளை தடுத்து வைக்குமாறு மத்திய வங்கி- மூன்று வங்கிகளுக்கு பணிப்பு விடுத்துள்ளது.

கடந்த வாரம் மேற்படி கம்பனியின் அலுவலகத்தில் சி.ஐ டியினரும் மத்திய வங்கி அதிகாரிகளும் திடீர் சோதனை ஒன்றை நடத்தினர்.

சிறிலங்காவை மையமாகக் கொண்டு பத்து நாடுகளில் இக்கம்பனி செயல்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. வெளிநாட்டுச் செலாவணி வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கு இந்தக்கம்பனிக்கு லைசென்ஸ் வழங்கப்படவில்லை எனவும் மத்திய வங்கியின் சிரேஷ்ட அதிகாரி தெரிவித்துள்ளார்.

## செயலமர்வு

யாழ் கல்வித் திணைக்கள வலயம் இரண்டைச் சேர்ந்த சகல முதன்மை ஆசிரியர்களுக்குமான செயலமர்வுநாளை மறுதினம் கோப்பாய் ம.வி. யில்காலை எட்டு மணிமுதல் இடம்பெறவுள்ளது.

# மட்டக்களப்பில் மட்டும் 8,000பேர் விதவைகளாகினர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் 1989ம் ஆண்டின் பின் இரண்டாம் ஈழப் போருக்குப் பின்னர் 8,000பேர் விதவைகளாகி யுள்ளனர்.

இத்தகவலை சிறிலங்கா மொனிற்றர் சஞ்சிகை வெளியிட்டுள்ளது. அத்துடன் 17,000பேர் அனாதைகளாகியுள்ளதாகவும் 40,000 இளைஞர் யுவதிகள் வேலைவாய்ப் பற்றிருப்பதாகவும் அச்சஞ்சிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கைதிகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கவும்

## நீதி அமைச்சரிடம் கோரிக்கை

(கொழும்பு)

அனைத்து அரசியல் கைதிகளையும் நிபந்தனையின்றி விடுதலை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு சிறிலங்கா முற்போக்கு முன்னணியின் தூதுக் குழுவொன்று நீதி அமைச்சர் ஜி. எல். பீரிசை சந்தித்துக் கோரிக்கை விடுத்துள்ளது.

நீதி அமைச்சர் பேராசிரியர் ஜி எல். பீரிசுடன் பதில் சட்டமாஅதிபர்சிப்லி அஸீஸ், இச் சந்திப்பின்போது மேலும் பல விடயங்களும் பேசப்பட்டுள்ளன. பயங்கரவாததடைச் சட்டத்தை மீளப்பெற வேண்டும் எனவும் ஜே. வி. பி. யின் முன்னாள் தலைவரான ரோகண விஜய வீராவின் குடும்பத்தினரை கொழும்பில் சந்திக்க வசதி செய்யப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடப்பட்டது. இச் சந்திப்பில் முற்போக்கு முன்னணியின்ஆரியபுளேகொட, நிஹால் ...

யாழ். றோட்டறிக் கழகத்தினரின்

துள்ளது.

நீதி அமைச்சர் பேராசிரியர் ஜி எல். பீரிசுடன் பதில் சட்டமாஅதிபர்சிப்லி அஸீஸ், அமைச்சின் செயலாளர் திருமதி தாரா விஜயதிலக ஆகியோரும் கலந்து கொண்ட விடப்பட்டது. இச் சந்திப்பில் முற்போக்கு முன்னணியின்ஆரியபுளேகொட,நிஹால் கலப்பதி, ஹேமந்த கருணாதிலக்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தற்காலிக நியமனம் ரத்து கல்வி அமைச்சர் பணிப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணக் கல்வி, கலாசார விளையாட்டுத்துறை அமைச்சினால் அண்மைக்காலத்தில் வழங்கப்பட்ட தற்காலிக சிற்றூழியர் காவலாளி மற்றும் நூலக உதவியாளர்களுக்கான நியமனங்களை உடனடியாக இரத்துச் செய்யுமாறு கல்வி உயர்கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரான உத்தர விட்டுள்ளார்.

இந்த நியமனங்கள் உரிய திட்டத்தின் கீழ் பகிரங்கமாக விளம்பரப்படுத்திவழங்கப்பட இல்லை எனவும், இந்நியமனங்கள் வழங்கப்பட்டதில் பாரபட்சம், முறைகேடுகள் என்பன காணப்படுகிறது எனவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது தெரிந்ததே.

## இலங்கை மாலுமிகளுக்கு நட்டஈடு வழங்க பணிப்பு

(கொழும்பு)

இலங்கையர்களான பத்தொன்பது மாலுமிகளுக்கு 42 ஆயிரத்து 07 அமெரிக்க டாலர்களை வழங்க வேண்டுமென நோர்வே கப்பல் நிறுவனமொன்றுக்கு மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

'மேரிநுலா' என்றகப்பலின் உரிமையாளர்களான 'ஸ்கான்டிக் ஷிப் மனேஜ்மென்ட் லிமிட்டெட்' நிறுவனத்திற்கே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேரிநுலா என்ற கப்பலில் வேலை செய்த 19 பேருக்கும் 3 மாதங்களுக்குப் பின் சம்பள உயர்வு வழங்கப் படுமென உறுதி அளிக்கப்பட்டு இருந்தது எனினும் ஆறு மாதங்களாகியும் சம்பள உயர்வு வழங்கப்படாததை ஆட்சேபித்து இவர்கள் வழக்கு தொடர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

## சமுர்த்தி பயிற்சியாளராக 40000பேர் நியமனமாவர்?

(கொழும்பு)

ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் மூவர் என்ற ரீதியில் வேலைவாய்ப்புக் கிடைக்காத க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தியெய்திய 40 000பேருக்கு சமுர்த்தி பயிற்சியாளர் பயிற்சி வழங்கப்படவுள்ளதாக இளைஞர் விவகார,விளையாட்டு கிராம அபிவிருத்தி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதுவரை 2000 பட்டதாரிகளுக்கு இவ்வாறு பயிற்சி அளிக்கப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாத இறுதியில் கிராமங்களிலுள்ள குடும்பங்களின் விபரங்களை திரட்டும் பணியில் 40000பயிற்சியாளர்களும் ஈடுபடுத்தப் படவுள்ளனர்.

# யாழ். றோட்டறிக் கழகத்தினரின் பாராட்டு விருது, சான்றிதழ் வழங்கும் வைபவம்

யாழ். மாவட்டத்தில் தொழில்சார் துறைகளில் வல்லுநர்களாக விளங்குவோரை பாராட்டி விருதும், சான்றிதழும் வழங்கும் வைபவத்தை யாழ். றோட்டறிக் கழகம், சனிக்கிழமை (24.12.1994)காலை 9.00 மணிக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடத்தவிருக்கிறது.


இம்முறை யாழ். மாவட்டத்தில் நான்கு துறைகளைச் சேர்ந்த வல்லுநர்கள் யாழ். றோட்டறிக் கழகத்தினால் கௌரவிக்கப்படவிருக்கின்றனர்.




திரு.
**முத்துக்குமாரு கண்ணன்**
(பிரபல இசையமைப்பாளர், "கண்ணன் கோஷ்டி" அமைப்பாளர்)



திரு.
**ஆசைப்பிள்ளை ஞானசேகரம்**
(ஞானம்)
(ஸ்கிறீன் பிறிண்டிங் நிபுணர், ''ஞானம் ஆட்ஸ் அன் அட்வடைசிங்ஸ்'' நிறுவன இயக்குநர்)



திரு.
**முத்துக்கிருஷ்ணர் அற்புததேவன்**
(மாயவர்)
(அச்சு இயந்திரங்கள் திருத்துவதில் வல்லுநர்)



செல்வி
**அன்னலெட்சுமி சின்னத்தம்பி**
(விழிப்புலனிழந்தோருக்கு நல்வாழ்வு அளித்துவரும் உடுவில் வாழ்வகத்தைச்சேர்ந்த ஆசிரியை)

ஆகியோரே இந்த வருடம் விருது வழங்கி கௌரவிக்கப்படவிருக்கும் துறைசார் வல்லுநர்களாவர்.

யாழ். றோட்டறிக் கழகம், றோற்றறக்ற் கழகம்,
இன்றறக்ற் கழகம்.

(சி-10993)

நத்தார்பண்டிகையை இனிமையாக
கொண்டாடுங்கள்

தரமான
வான் கோழிகள், இறைச்சிக் கோழிகள்
விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
மருதம் கோழிப்பண்ணை,
பலாலி வீதி,
திருநெல்வேலி.

(சி-10985)

தமிழீழ மக்களிற்கு ஓர் நற்செய்தி

மலிவு விற்பனை

பட்டுச் சேலைகள்
பட்டு வேட்டிகள்
சாறி வகைகள்
மாட்டீன் ஷேட்ஸ்
சூட்டிங்ஸ்
சகல விதமான பிளவுஸ் பீஸ் வகைகள்

சோதி புடைவையகம்

14, சிறப்பு அங்காடி
யாழ்ப்பாணம்.

கிளை ஸ்தாபனம்: சோதிபுடைவையகம்
இணுவில்
(சி-10957)

நத்தார் நன்னாளிலே
திடீர் விருந்தினருக்கு
விருந்தளிக்க தினமும்
ஹோ. எகட்டனின்
ஜெசித்தாரா தரும்
நத்தார் வெகுமதி நாவிற்கு சுவையும்

நீங்கள் கொடுக்கும் பணத்திற்கு பெறுமதி மிக்க சுகாதாரமான பண்டங்களை, நத்தார் வெகுமதியாக தினமும் ஓடர் செய்து பெற்றுக்கொள்ளவும். அத்துடன் எமது விருந்தகத்தில் ஒன்று கூடி உண்ணலாம்
விசேஷ லம்பாரிஸ் புரியாணி, கோழி புரியாணி (நெய்க் கலவை), ஆட்டிறைச்சி புரியாணி

# தொழிலாளர்களிடையே அமைதியீனம் முதலீட்டாளர் மத்தியில் பதற்றம்

## இந்து பத்திரிகை தகவல்

(கொழும்பு)

தொழிலாளர்களின் மத்தியில் நிலவும் அமைதியின்மை காரணமாக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் சிறிலங்காவிலிருந்து விரட்டப்படுகின்றனர். இவ்வாறு சென்னையிலிருந்து வரும் இந்து நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. கைத்தொழில் வர்த்தக உறுதிப்பாட்டை மீட்டெடுக்கபொதுஜனஐக்கிய முன்னணி அரசு எதையும் செய்யமுன்வரவில்லையென அது மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

அது மேலும் கூறுகையில் ஐ. தே. க. அரசு இழைத்த தவறுகளைத் திருத்தப் போவதாக பொதுசன ஐக்கிய முன்னணி அரசு கூறிக் கொள்ளும் போதும் முன்னைய அரசுகள் மேற் கொண்ட உடன்படிக்கைகளிலிருந்து பின் வாங்கி வர முடியாது என்பதையும் உணர்கிறது. ரஷ்ய ஆயுதக் கொள்வனவு விமானக் கொள்வனவு, மற்றும் புத்தளத்தில் நிறுவப்படும் அமெரிக்கவானொலி நிலையப் பணி போன்றவற்றை இதற்கு உதாரணமாக குறிப்பிடக் கூடும் எனவும் தெரிவித்துள்ளது.

# கப்பல்வசதி தேவைப்படின் அரச அதிபரிடம் கோரலாம்

கொழும்பில் இருந்து பொருட்களை தருவிப்பதற்கு கப்பல் வசதி தேவைப்படின் முன்கூட்டியே தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு அரச அதிபரினால் அறிவிக்கப் பட்டுள்ளது.

இதற்கான கடிதங்கள் யாழ் மாவட்ட அரச அதிபர்பொன்னம்பலத்தினால் சகல திணைக்களங்களிற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அண்மைக்காலமாக கப்பல் சேவையில் ஏற்பட்ட சீரின்மையால் குடாநாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை நிவர்த்திக்க அரச அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

கொழும்பு சென்றுள்ள அரச அதிபர் குடாநாட்டிற்கான கப்பல் சேவையை சீராக்குவது தொடர்பாக அரச உயர் அதிகாரிகளுடன் பேச உள்ளார் என செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (இ)(பா)

அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையின்
விசேட பொதுக் கூட்டம்

இடம்:- யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச்சபை மண்டபம்

காலம்:- 30-12-94 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி

தலைவர்:- திரு வை. செந்தில்நாதன் (தலைவர், யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை)

அனைத்து அங்கத்துவ சங்கங்களிற்கும் தபால் மூலம் அழைப்புக்கடிதமும், நிகழ்ச்சி நிரலும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அழைப்புக்கடிதமும், நிகழ்ச்சிநிரலும் கிடைக்காத சங்கங்கள் எமது காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

அனைத்து அங்கத்துவ சங்கங்களினதும் பொதுச் சபை பிரதிநிதிகளை கூட்டத்திற்கு தவறாது பங்கு பற்றி ஒத்துழைப்பு வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

சு. சிவசுப்பிரமணியம்
செயலாளர்

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை
இல. 14 மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-10991)

## மூளைக் காய்ச்சல் ஒருவர் மரணம்

(திருநெல்வேலி)

நேற்று முன்தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் மூளைக்காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நோயாளி ஒருவர் மரணமானார்.

சுதுமலை மானிப்பாயைச் சேர்ந்த ஆரோக்கியநாதர் லூர்தம்மா என்ற 63 வயது வயோதிப மாதுஆவார்.

வாடிக்கையாளர்,
அன்பர்கள்,
ஆதரவாளர்களுக்கு
நத்தார் புதுவருட
வாழ்த்துகள்....

எமது மெழுகுதிரியை
நத்தார் புதுவருட
அன்பளிப்பாக
அன்பளித்து

மகிழ்ச்சி அடையுங்கள்

★ கப் மெழுகுதிரி
★ கிளாஸ் மெழுகுதிரி
★ கிளாஸ் மெழுகுதிரிக்குரிய ரீபில்கள்
★ கொப்பி வகைகள்

மொத்த விலையில்
சில்லறையாக
பெற்றுக்கொள்ளலாம்.

கண்ணன் கிதை
(மக்கள் வங்கிக்குமுன்னாக
112, அருச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.
(சி 10988)

# தொழிற் திறமை விருது வழங்கும் வைபவம் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். றோட்டறிக்கழகம் நடத்தும் தொழிற் திறமை விருதுகள் வழங்கும் வைபவம் இன்று காலை 9 மணிக்கு நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் வைபவத்தில் திரு.மு. (கண்ணன்கண்ணன்கோஷ்டி) திரு. ஆ. ஞானசேகரம் (ஞானம் ஆட்ஸ், சங்கானை) திரு. மு. அற்புததேவன் (மாயவர்) அச்சுப் பொறி வல்லுநர், செல்வி அ. சின்னத்தம்பி (வாழ்வகம்)- விழிப்புலன் வலுவிழந்தோர் இல்லம்) ஆகியோருக்கு இவ் விருதுகள் வழங்கி கௌரவிக்கப் படவுள்ளது.

மேலும் யாழ். போதனா வைத்தியசாலை தாதிய உத்தியோகஸ்தர்களான செல்வி என் தயாநிதி, ரி. சிவலிங்கம். திருமதி எஸ். எம். ஜே. ரஞ்சிதம், செல்வி என். மஞ்சுளாதேவி, திருமதி ஏ. கணபதி, எம். நவரத்தினராசா ஆகியோருக்கு சேவை விருதுகளும், செல்வி தர்ஷினி சுப்பிரமணியத்திற்கு, உரும்பிராய் றோட்டறிக் கிராமிய கழகத்திற்கு தொடர்ந்து ஆற்றிய சேவைக்காக இளைஞர் சிறப்பு விருதும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

## செப்ரிசீமியா ஒருவர் மரணம்

(திருநெல்வேலி)

நேற்றுமுன் தினம் யாழ். போதனாமருத்துவ மனையில் செப்ரிசீமியா நோயாளி ஒருவர்மரணமானார்.

ஆவரங்காலைச் சேர்ந்த தர்மராஜா நாகரத்தினம் என்ற 34 வயதான பெண்மணியே செப்ரிசீமியாவால் மரணமானவராவார் (27)

## மீண்டும் குரக்கன் கொள்வனவு

குரக்கன் பயிற் செய்கையாளரது உற்பத்தியினை சந்தைப்படுத்துவதன் ஊடாக குரக்கன் செய்கையை மேலும் ஊக்குவிக்கும் நோக்குடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மக்களிடமிருந்து குரக்கனை கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளில் கடந்த வருடம் 49110 கிலோ குரக்கனையும் இவ்வருடம் 275000 கிலோ குரக்கனையும் கொள்வனவு செய்துள்ளது.

மேலும் குரக்கன் செய்கையாளரது நன்மை கருதி மீண்டும் ஒரு கிலோ ரூ.26/- வாக கொள்வனவு செய்யவுள்ளது.

எனவே குரக்கனை விற்பனை செய்ய விரும்புவோர் தங்கள் வட்டங்களில் உள்ள

## விபத்தில் பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வின்சர் தியேட்டர் சந்தியில் மா லொறியுடன் துவிச்சக்கரவண்டி விபத்துக்குள்ளானதில் பெண் ஒருவர் படுகாயமடைந்தார்.

அண்மையில் நடந்த இவ் விபத்தின்போது துவிச்சக்கர வண்டியில் பின்னால் இருந்து வந்த தொல்புரத்தை சேர்ந்த பாலசுப்பிரமணியம் புஸ்பராணி (வயது 36) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

லொறியின் பக்கபகுதியில் துவிச்சக்கரவண்டியின் கான்ரில் தட்டுப்பட்டவுடன் பின்னால் இருந்துவந்த இவர் லொறியின் உட்பகுதிக்குள் வீழ்ந்தார்- அவ்வேளை லொறிச் சில்லு காலொன்றை நசித்துக் கொண்டு சென்றது.

## சலகூடம் அமைப்பு

சுகாதாரத்தை பேணும் நோக்கில் யாழ். கலட்டி தமிழ் கலவன் பாடசாலையில் தேசநிர்மாணிகள் சலகூடம் ஒன்றை அமைத்துள்ளனர்.

கல்வித் திணைக்களத்தின் பிரமாண அடிப்படையிலான மூலதன ஒதுக்கீட்டு நிதியிலிருந்து இவ்வேலை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## கோப்பாய் அணைக்கட்டு புனரமைப்பு

தொண்டமனாறுகடல்நீர்ஏரி உவர்நீர் கோப்பாய் பகுதியில் உள்ளவிவசாய நிலங்களுக்குள் உட்புகுவதை தடுக்கும் நோக்கில் 1½மைல்நீளமான அணைக்கட்டை தேசநிர்மாணிகள் இப்பகுதியில் அமைத்துள்ளனர்.

துரித நீர்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நீர்ப்பாசனத் திணைக்கள வெள்ள நிவாரண நிதியிலிருந்து இப்புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்

விசேஷ லம்பாரிஸ் புரியாணி, கோழி புரியாணி (நெய்க் கலவை), ஆட்டிறைச்சி புரியாணி (நெய்க் கலவை), **Sea Food Mixed Grill** புரியாணி, பிறைட் றைஸ் (எல்லா இறைச்சி வகைகளுடன்), நூடில்ஸ் இன் **Soya Souce**

**Rice & Curry With Special Meat**

வீட்டிற்கு வெளியிலே ஒரு மனை
அது ஜெசித்தாரா தரும் மனை

தினமும் காலை 10. 00 மணி முதல்
இரவு 7. 00 மணி வரை திறந்திருக்கும்.

24, 25, 26-ம் திகதிகளில்
இரவு 10. 00 மணி வரை திறந்திருக்கும்

ஜோ. எகட்டனின்

## ஜெசித்தாரா

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.

புது யுகத்தில் புது உலகம்
ஜெசித்தாரா
எமக்கு வேறு கிளைகள் இல்லை

(சி-10975)

---

¡ஜழயுமழ

### வருடம் 365
### நாளும் தினமும்

காலை 11. 45 முதல் 3. 30 பிற்பகல் வரை
ஜோ. எகட்டனின் ஜெசித்தாராவின்
உணவுப் பொதிகளை தங்கு
தடையின்றி பெற்றுக்கொள்ளலாம்.

## ஜெசித்தாரா

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.

(சி- 10976)

---

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
### யாழ். மாவட்டம்

## மீன் பதிவிற்கான அறிவித்தல்

★ யாழ். மாவட்டத்தில் இயங்கும் சகல தனியார் கல்வி நிறுவனங்கள்/ பிரத்தியேக வகுப்புகள்/ 09 பேருக்கு குறைந்த மாணவர்களைக்கொண்ட வகுப்புகள் அனைத்தும் தங்களது பதிவுகளைப் புதுப்பித்தல் வேண்டும்.

★ மீள் பதிவுகள் மேற்கொள்ளப்படும் காலம்

26.12.94 திங்கள் 9.00-12.00 மணிவரை
28.12.94 புதன் 9.00-2.30 மணிவரை
30.12.94 வெள்ளி 9.00-12.00 மணிவரை

★ மீள் பதிவுகள் பின்வரும் அலுவலகங்களில் மேற்கொள்ளப்படும்

யாழ் கோட்டம், மருதனார்மடம் கோட்டம், பண்டத்தரிப்புக் கோட்டம்

யாழ். மாவட்ட ஒன்றிய அலுவலகம்
19, செம்மணி வீதி, யாழ்ப்பாணம்.

வடமராட்சிக் கோட்டம்
சதாபொன்ஸ்
மாலுசந்தி

தென்மராட்சிக் கோட்டம்
சுஷாந்திஸ்
23, டச்சு வீதி, சாவகச்சேரி.

★ மீள்பதிவிற்கு கட்டணம் எதுவும் செலுத்தத் தேவையில்லை

★ மீள்பதிவு செய்யாத கல்வி நிறுவனங்கள்/ பிரத்தியேக வகுப்புகள் 31.12.94க்கு பின்னர் இயங்க அனுமதிக்கப்படமாட்டா.

தலைவர்
**தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்**
யாழ். மாவட்டம்

(சி-10983)

---

எனவே ... விற்பனை செய்ய விரும்புவோர் தங்கள் வட்டங்களில் உள்ள பசுமை வேளாண் சேவை நிலையங்களில் விற்பனை செய்யலாம் என தமிழீழ பொருண்மியமேம்பாட்டு நிறுவனம் தெரிவிக்கின்றது.

... நிதியிலிருந்து இப்புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் மூலம் இப்பகுதியில் விவசாயத்தை மேற்கொள்ளவும் மழைநீர் தேங்கி நிற்கவும் ஏதுவாக இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

---

## கட்டைவேலி - நெல்லியடி
### ப. நோ. கூ. சங்கம்
## விசேட கலந்துரையாடல்

தமிழீழ நிர்வாக சேவையினரால் நடாத்தப்படவுள்ள இன்றைய அரசியல் நிலை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று 26 12.94 திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது, எனவே கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தலில் வாக்களிக்கும் தகுதியுடைய கிளை அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகந்தருமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

கரவெட்டி,
22.12.94 (சி.10994) தலைவர்.

---

## முக்கிய அறிவித்தல்

### வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலகம் - சண்டிலிப்பாய்

## குடும்ப விபரத் திரட்டு படிவம்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசத்தில் நிரந்தரமாக வாழும் மக்களும் இப்பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்து வேறு பிரதேசத்தில் வாழும் மக்களும் தத்தமது கிராம அலுவலர்களிடம் ஏற்கனவே பெற்றுக் கொண்ட குடும்ப விபரத் திரட்டுப் படிவத்தை 30. 12. 1994க்கு முன்னதாக உரிய கிராம அலுவலரிடம் ஒப்படைக்குமாறும், படிவத்தைஇதுவரை பெறாதவர்களும் பெற்று, அதனை பூரணப்படுத்தி மேற்குறித்த திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.

து. வைத்திலிங்கம்
பிரதேச செயலர்/மேலதிக அரசாங்க அதிபர்,
வலி. தென்மேற்கு, சண்டிலிப்பாய்.

(சி-10984)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

**சிந்தனைக்கு..**

தயக்கம் பல அற்புதமான வாய்ப்புகளை தட்டிப் பறித்து விடுகிறது.

- புப்லியஸ் ஸைரஸ்

**ஈழநாதம்**

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 24-12-94
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

## தடம் மாறியதால் ஏற்பட்ட தடங்கல்

இனப்பிரச்சினை தொடர்பான இன்றைய அரசியல் நிலை பற்றி நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர்மாநாட்டில் விடுதலைப்புலிகள்இயக்கத்தின்ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், தெளிவாகவும், விரிவாகவும் விளக்கம் அளித்துள்ளார். இதில் போர் நிறுத்தம், சமாதானப் பேச்சுக்கள் பற்றிய அரசாங்கத்தின் நிலைப்பாடு- இது தொடர்பான கருத்து முரண்பாடு- இவ்வாரம் நடைபெறவிருந்த சமாதானப் பேச்சுவார்த்தைகள் பிற்போடப்பட்டமைக்கான காரணங்கள்- போன்ற பல விடயங்களுக்கும் விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்த வகையில், இனப்பிரச்சினை தொடர்பான முதலாம் கட்டப் பேச்சுவார்த்தையில் இடம்பெற்ற முக்கிய அம்சங்கள், அரசிற்கும் - விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கும் இடையில் நடந்த கடிதப் பரிமாற்றத்தின் முக்கிய விடயங்கள் என்பனவும் தெளிவாகச் சுட்டிக் காட்டப்பட்டன.

இதன் அடிப்படையில்சமாதானப்பேச்சுவார்த்தை தொடர்பாக விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு உறுதியானதாகவும், தெளிவானதாகவும் இருப்பதை எவரும் கண்டு கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. ஆரம்பம் முதலே விடுதலைப்புலிகள் இயக்கம் சில விடயங்களைத் தெளிவாக சுட்டிக்காட்டி வந்துள்ளது. இதில், போர் நிறுத்தம், இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பதற்கு முன்பு தமிழ் மக்களின் அன்றாட, அத்தியாவசியமான பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும். அதுவே சமாதான ரீதியாக இனப் பிரச்சினையைத்தீர்ப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பது வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது.

விடுதலைப் புலிகளின் இந்நிலைப்பாடானது இனப் பிரச்சினைக்கான அரசியற்தீர்வு காண்பதற்கான முதல் கட்ட நடவடிக்கையாக இருக்கும் என்பதை எவரும் மறுக்க முடியாது. சுமார் 40 வருடங்களுக்கு மேற்பட்ட சிக்கலாகிப் போய்விட்ட ஒரு பிரச்சினையை ஒரு சுற்று, இரண்டு சுற்றுப் பேச்சுக்களில் இலகுவில் தீர்த்து வைக்க முடியாது. அதில், மக்களுக்கு நம்பிக்கையும் ஏற்பட்டுவிட மாட்டாது என்பதே உண்மை நிலையாகும்.

இதனை சந்திரிகா குமாரதுங்கா அரசும் ஆரம்பத்தில் ஏற்றுக்கொண்டே இருந்தது. ஆனபடியால்தான், முதலாம் கட்டப் பேச்சுக்களின் போது இவ் அன்றாட, அத்தியாவசிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் உடன்

## காங்கிரஸ் அரசு பதவிதுறந்து புதிய தேர்தல் நடத்த வேண்டும்

### அத்வானி கோரிக்கை

(டில்லி)

மூன்று அமைச்சர்கள் பதவி துறந்திருப்பதையடுத்து தற்போது அரசியல் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது எனவும், அரசு உடனடியாகப் பதவி விலகித் தேர்தலை நடத்த வேண்டும் எனவும் பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் எல்.கே அத்வானி கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றுக்காலையில் புதுடில்லியில் பாராளுமன்றம் கூடிய போது அங்கு உரையாற்றிய அத்வானி மேலும் கூறுகையில், மக்களிடம் இருந்து புதிய கட்டளையை அரசு பெற வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதனிடையே பாராளுமன்ற அமர்வில் பெரும் கூச்சலும், குழப்பமும் ஏற்பட்டதையடுத்து சபை அமர்வு பிற்பகல் வரை ஒத்திவைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**ஜனவரி 6ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில்**

## ஜனாதிபதி சந்திரிகாவின் கொள்கை விளக்கவுரை

### - தர்மசிறி சேனநாயக்க

(கொழும்பு)

நாம் ஐ.தே.க.ஆட்சிஅமைத்திருந்த அரசியல் அமைப்புக்குள்தான்இன்னும் இருந்து வருகிறோம். இந்தஅமைப்பை உடைத்து உலகிற்கும் நாட்டிற்கும் அறிவிக்கும்நாள் ஜனவரி 6ஆம் திகதியாகும். அன்றுதான் ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்ககுமாரதுங்காநாடாளுமன்றத்தில் தனது ஆட்சியின் பிரகடனத்தை - வேலைத்திட்டத்தை நாடறிய உலகறியச் செய்வார். இவ்வாறு சுற்றுலா விமான சேவை வெகுஜன தொடர்பு சாதன அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா கூறியுள்ளார்.

கிராம சேவகர் சங்கத்தின் ஆரம்ப விழாவில் கலந்து கொண்டு உரையாற்றியஅவர் மேலும் கூறுகையில் ஐ.தே.கவினர் இன்று பெரிய ஜனநாயகவாதிகளைப் போல பேசுகிறார்கள். ஆனால் அவர்களது ஆட்சிக் காலத்தில் எதிர்க்கட்சியினரை எப்படி நடத்தினார்கள் என்பதை இந்த நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள் எனவும் குறிப்பிட்டார்.

## ஒளிவிழா

துன்னாலை சதா சகாய மாதா தேவாலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 7-00 மணியளவில் பங்குத்தந்தை சேபரட்ணம் அடிகளார் தலைமையில் 'ஒளி விழா, நடைபெறவுள்ளது

யோ)

## பயிலுநர் ஆசிரியர் பரீட்சை ஜனவரி 7க்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

ஆசிரியர் பற்றாக்குறை அதிகமுள்ள மாவட்டங்களுக்கு தமிழ்மொழி மூல பயிலுநர் ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் ஜனவரி 7ந் திகதிக்கு பிற்போடப்படலாம் என பரீட்சைகள் ஒருங்கிணைப்புக் கிளையின் பிரதி ஆணையாளர் தெரிவித்துள்ளார், எனினும் இது குறித்த ஊர்ஜிதமான தகவல்கள் தெரிய வரவில்லை.

இப்போட்டிப் பரீட்சை இம்மாதம் 31 ந் திகதி சனிக்கிழமை நடைபெறத் திட்டமிடப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் முன்னதாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கடதாசி உற்பத்தி வீழ்ச்சி; கொப்பிக்கு தட்டுப்பாடு?

(கொழும்பு)

வாழைச்சேனை, எம்பிலிப்பிட்டிய கடதாசி ஆலைகளில் கடதாசி உற்பத்தி வீழ்ச்சி அடைந்திருப்பதை தொடர்ந்து அப்பியாச கொப்பிகளுக்கு பாடசாலைகள் திறக்கப்படும் ஜனவரி மாதத்தில் தட்டுப்பாடு ஏற்படலாமென செய்திகள் தெரிவிக்கின்றன.

திறந்த வர்த்தக சந்தையில் கடதாசி கிடைக்கப் பெற்றாலும் இதன் விலை அதிகரித்துள்ளதன் காரணமாக அப்பியாசக் கொப்பிகளின் விலை உயர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சோதனை சாவடிகள் புல

## கட்டியவீடுகளவுபோனது உரிமையாளர் புகார்

(கொழும்பு)

அசையும் சொத்துக்களான சைக்கிள், கார், லொறி போன்றவற்றை திருடர்கள் களவாடிச் செல்வதைப் பற்றி கேள்விப்பட்டுள்ளோம். ஆனால் அசையாத சொத்தான ஒரு வீட்டையே திருடர்கள் களவாடிச் சென்ற சம்பவமொன்று புத்தளம் பகுதியில் நடந்துள்ளது.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது: புத்தளம் அடப்பனாவில்லு என்னும் இடத்திலுள்ள தென்னந்தோட்டத்தில் அதன் உரிமையாளர் பல்லாயிரம் ரூபா செலவு செய்து வீடு ஒன்றைக் கட்டினார். அதன்பின் பல நாட்கள் தோட்டத்துக்கு செல்லும் வாய்ப்பு அவருக்குக் கிடைக்கவில்லை.

அண்மையில் அவர் தனது தோட்டத்துக்குச் சென்றபோது அவருக்கு அதிர்ச்சியொன்று காத்திருந்தது. பல கஷ்டங்களுக்கு மத்தியில் பல்லாயிரம் ரூபாய் செலவில்கட்டப்பட்டஅவரதுவீடுஅங்கேஇருக்கவில்லை வீடுஇருந்தஎந்தவொரு தடயங்களும்இல்லாமல்முழுப் பொருட்களும்எடுத்துச்செல்லப்பட்டுவிட்டிருக்ககாணப்பட்டது. தற்போது திருடிச் செல்லப்பட்ட வீட்டை புத்தளம் பொலிசார் தேடி வருகின்றனர்.

## உலகத் தமிழ் மாநாடு அல்ல; இது பெரும் ஊழல் மாநாடு

### மு. கருணாநிதி தெரிவிப்பு

(சென்னை)

உலகத் தமிழ் மாநாடு ஒரு ஊழல் மகாநாடாகும் என திமுக தலைவர் மு. கருணாநிதி குற்றம் சாட்டியுள்ளார்

அவர் தமிழக பத்திரிகையொன்றில் இது தொடர்பாக எழுதியுள்ள கடிதமொன்றில் கூறியிருப்பதாவது,

உலகத்தமிழ் மகாநாடு தமிழகத்தில்அறிஞர்அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது நடைபெற்றிருக்கிறது. மீண்டும்தமிழகத்தில் அருமை நண்பர் எம்,ஜி.ஆர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும் மதுரை மாநகரில் நடைபெற்றிருக்கிறது. அந்த மாநாடுகளுக்கு அரசின் சார்பில் ஐம்பதுகோடி அறுபது கோடியென பணம் செலவழிக்கப்படவில்லை

தமிழின் தொன்மை பெருமையைசீர்மையை செழுமையைஇலக்கிய, இலக்கணவளத்தை எடுத்துக்காட்டுவது- போற்றிப்புகழ்வதுஅத்தகைய மொழி மீது இன்றுள்ள தலைமுறையும் எதிர்காலத் தலைமுறையும் இடையறாப் பற்றுக் கொண்டுஅம்மொழியைக் காத்திடும் பேரரணாக விளங்குவது என்பது மட்டுமல்லாமல் இன்றுள்ள நிலையில் மிக முக்கியமாக உலகில் வளர்ந்து வரும் அறிவு யுகத்திற்கு ஏற்ற வண்ணம் நமது தமிழ்மொழியையும் வலிமை வாய்ந்த கருவியாக ஆக்கப்பட்டாக வேண்டும் என்பதும் உலகத்தமிழ் மகாநாட்டின் குறிக்கோளாகும் என்பதை யாரும் மறந்து விடக்கூடாது

இதுவரை எண்ணிக்கையில் ஏழுஉலக தமிழ்மகாநாடுகள் நடைபெற்றுள்ளபோதும்அந்தமகாநாடுகளையொட்டியகருத்தரங்குகள் ஆய்வரங்குகள் அவற்றில் எடுக்கப்பட்ட முடிவுகள் இன்னமும்முழுமையாக பயனைவிளைவித்திடவில்லை என்பதை ஒப்புக்கொண்டுதானாகவேண்டும்.

## தஞ்சாவூர் கலைக் கூடம் புதுப்பிக்க நிதி ஒதுக்கீடு

(சென்னை)

எட்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை முன்னிட்டு தஞ்சாவூர் அரண்மனை வளாகத்தில் இருக்கும் கலைக் கூடம் அழகு படுத்தப் படவுள்ளது. இதற்கென 12 லட்சத்து 54 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கலைக் கூடத்திலுள்ள செப்பு திருமேனிகளுக்கு கண்ணாடிப் பெட்டிகள் அமைக்க சுமார் மூன்று லட்சம் ரூபாவும், புதிய மின்விளக்குகள் பொருத்த சுமார், மூன்று லட்சத்து 21 ஆயிரம் ரூபாவும் சிற்பங்களை அழகுபடுத்த சுமார்3 லட்சத்து 81 ஆயிரம் ரூபாவும், கலைக்கூடம்மற்றும் சங்கீத மகால் கட்டடத்துக்கு வண்ணம் தீட்ட சுமார் இரண்டு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாமல்லபுரம் கலைப் பயிற்சிக் கல்லூரி வல்லுநர்கள் இப் பணிகளை மேற் கொண்டுள்ளனர்.

## மாநாட்டை முன்னிட்டு ஐந்து நாள் கண்காட்சி

தில் ஏற்றுக்கொண்டே இருந்தது. ஆனபடியால்தான், முதலாம் கட்டப் பேச்சுக்களின் போது இவ் அன்றாட, அத்தியாவசிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் உடன்பட்டும் இருந்தது.

ஆனால் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் சந்திரிகா அரசாங்கத்தின் நிலைப்பாடானது மாற்றம் கண்டது. ஆரம்பத்தில், திறந்த மனத்துடன் பேசிய அரசாங்கம், பின்னர் அவ்வாறு பேசுவதைத் தவிர்த்தது. அதே வேளை சமாதான முயற்சிகளை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் எதிலும் அக்கறை காட்டவும் தவறியது.

இந்நிலைக்கு இராணுவத்தின் அழுத்தத்திற்கு அரசாங்கம் பணிந்து சென்றதே காரணமாகும். எந்த நிலையிலும், தற்பொழுதுள்ள நிலையில் இருந்து ஒரு அங்குலம் தானும் பின்வாங்க முடியாது என்ற இராணுவத்தின் நிலைப்பாட்டை அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. அத்தோடு, பொருளாதாரத் தடை உட்பட, ஏனைய தடைகள் எவற்றையும் நீக்கவும் இராணுவம் தயாராக இருக்கவில்லை.

இந்த நிலையில்தான், இராணுவத்தினரின் கொள்கைக்கு ஏற்ப அரசாங்கம் தனது கொள்கையை இசைவாக்கம் செய்து கொண்டது. இதற்கேற்பவே முதலாம் கட்டப் பேச்சுவார்த்தையில் அரசாங்கம் ஏற்றுக் கொண்ட அன்றாட, அத்தியாவசிய தேவைகள் குறித்த பேச்சுக்களைத் தவிர்த்துக் கொண்டது. அதாவது சந்திரிகா அரசாங்கம் தடம்மாறத்தொடங்கியது.

இந்த வகையில், ''இராணுவத்தை கொஞ்சத் தூரம் விலக்கி பாதையைத் திறக்க முடியாத அரசால் 40வருடகால இனப்பிரச்சினையைத் தீர்த்து தமிழர் தாயகத்தில் இருந்து இராணுவத்தை முற்றாக வாபஸ் பெற முடியுமா?'' என்று எழுப்பப்படும் கேள்வியில் நியாயமில்லை என்று எவரும் மறுக்க முடியுமா?

ஆகையினால்தான் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையில் முட்டுக்கட்டைகள் எழுந்தன. அதாவது அரசாங்கம் புதிய அரசியற்சூழ்நிலையில், புதியதொரு நிலைப்பாட்டுடன் பேசமுனைந்தமையே இப்பேச்சுவார்த்தைக்கு தடையாக இருந்தது. இது ஒரு வகையில் காலம் காலமாக சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்களை ஏமாற்ற முற்பட்டமைக்கு ஒப்பானதே ஆகும்.

ஆனால், இன்றைய தமிழ் மக்களின் தலைமை அவ்வாறு ஏமாற்றப்படக்கூடியதல்ல. தமது கொள்கையிலும், நடவடிக்கைகளிலும் இன்றைய தலைமை உறுதியானது என்பதை சிங்களத் தலைமை புரிந்து கொள்ள வேண்டும். இனப்பிரச்சினைக்கு சமாதானத்தீர்வு ஒன்று காணப்படவேண்டுமானால் சிறிலங்கா அரசு அதில் நேர்மையாகவும், உறுதியாகவும் இருக்கும் பட்சத்திலேயே சாத்தியமாகும்.

## சோதனை சாவடிகள் பல அகற்றப்படவில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் கடந்த தேர்தல் காலத்தின் போது அமைக்கப்பட்ட சோதனைச் சாவடிகளில் பல இன்னமும் அகற்றப்படவில்லையென்று தெரியவருகிறது. இச்சோதனைச்சாவடிகள் தேர்தல்முடிந்தகையோடு அகற்றப்படுமெனபடையினர்முன்னர்கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது. சிறிலங்கா படையினரின் அதிகரித்த சோதனை சாவடிகள் மற்றும் சோதனை நடவடிக்கைகளின் மத்தியிலேயே தென் தமிழீழத்தில் சிறிலங்கா அரசின் நிர்வாகம் நடைபெறுவதாகக் கூறப்படுகிறது.

கல்முனை முதல் மட்டக்களப்புக்கு இடையில் மட்டும் பத்துக்கும் மேற்பட்ட சோதனை சாவடிகள் இருப்பதாகவும் மேலும் தெரிய வருகிறது.

## தொழில்நுட்ப சேவைகளின் மீளமைத்தல் புறக்கணிப்பு

(கொழும்பு)

நடுத்தர ஒன்றிணைக்கப்பட்ட தொழிநுட்ப சேவைகளை மீளமைத்தல் தொடர்பாக பொதுநிர்வாகஅமைச்சினால் அனுப்பப்பட்ட சுற்றறிக்கை கடந்த ஐந்து மாதகாலமாக வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திணைக்களத்தால் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏழாம் மாதத்திலிருந்து இது நடைமுறைக்கு வருவதாக அறிவிக்கப்பட்டும்-புதிய தரங்களுக்குரிய சம்பள உயர்வுகள் வழங்கப்படவில்லையென்றும் புகார் செய்யப்பட்டுள்ளது.

## சிங்கராஜ வனப் பகுதியில் உலகில் சிறந்த தண்ணீர்

(கொழும்பு)

உலகின் சிறந்த தண்ணீரை கனடாவில்தான் பெற முடியும். அதனைஒத்த தண்ணீரை சிறிலங்காவில் சிங்கராஜ மலைஅடிவாரத்தில் உள்ள ஊற்றுக்களிலிருந்து பெற முடியும் என வனவள பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிங்கராஜ காட்டில் காணப்படும் 'களுகீன' என்ற மூலிகை புற்றுநோயை குணமாக்குமென ஜப்பானிய ஆராய்ச்சி ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

சிங்கராஜ காட்டில் 27 வகையான நுளம்புகளும் ஐந்து வகையான பாம்புகளும் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐந்து நாள் கண்காட்சி

(சென்னை)

தஞ்சாவூரில் நடைபெறவுள்ள தமிழாராய்ச்சி மாநாட்டை முன்னிட்டு பழமையும், புதுமையும் இணைந்த வகையில் கண்காட்சி ஒன்று நடத்தப்படவுள்ளது. ஐந்து நாட்கள் வரை நீடிக்கும் இக்கண்காட்சியில், தமிழ்மொழியின் தொன்மை, சிறப்பு, தமிழர்களின் அக்கால பண்பாடுகள் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் பல அரங்கங்கள் அமைக்கப்படவுள்ளன. இப் பொருட்காட்சி ஏற்பாடு தவிர தனியாக மற்றுமொருஅறிவியல் பொருட்காட்சியும் நடைபெறவுள்ளது.

## மாநாட்டை முன்னிட்டு ரூ.85லட்.திற்குகலையரங்கம்

(சென்னை)

உலகத் தமிழ் மகாநாட்டை முன்னிட்டு தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் சுமார் 85 லட்சரூபா மதிப்பில் நவீன கலையரங்கம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது.

மகாநாட்டுக்கு வரும் அறிஞர்கள் தங்கள் படைப்புகளை சமர்ப்பிப்பதற்கு வசதியாக பிரமாண்டமான அளவில் இது கட்டப்பட்டு வருவதாக மக்கள் தொடர்புத் துறையினர் கூறியுள்ளனர்.

1500 இருக்கைகளையும் பெரிய கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்குரிய அனைத்து வசதிகளையும் கொண்டதாக இது அமைக்கப்பட்டுள்ளது. மகாநாட்டிற்குப் பின்னர் இது தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் பயன்படுத்தப்படவுள்ளது.

இது தவிர திருவள்ளுவர் நினைவு மண்டபத்திற்கு 12.49 லட்சம் ரூபாவும், பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் தொட்டிக்கு 13 லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்துடன் விருந்தினர் விடுதி 25 லட்சம் ரூபா செலவில் விரிவாக்கம் செய்யப்படுகிறது.

## மத்திய அமைச்சர்கள் மூவர் ராஜினாமா -ராவ் ஏற்பு

(டில்லி)

மத்திய அமைச்சரவையிலிருந்து சுகாதார அமைச்சர் சங்கர்ஆனந்த், ஊரக வளர்ச்சித் துறை இணைஅமைச்சர் ராமேஷ்வர் டாகூர், உணவுத் துறை அமைச்சர் கல்பனாத் ராய் ஆகியோர் இராஜினாமா செய்துள்ளனர்.

இவர்கள்தத்தமதுராஜினாமா தொடர்பாக பிரதமர் பி.வி.நரசிம்மராவுக்குஎழுதிய கடிதம் அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து குடியரசுத்தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

தென் மாநில சட்டப் பேரவைத் தேர்தல்களில் காங்கிரசுக்கு ஏற்பட்ட படுதோல்வியைத்தொடர்ந்து நரசிம்மராவின் தலைமைத்துவத்திற்கு நெருக்கடிஏற்பட்டிருப்பதும், ஊழல் விவகாரங்கள் பல அம்பலத்துக்கு வரத் தொடங்கியிருப்பதும் தெரிந்ததே.

அமைச்சர்களான சங்கர் ஆனந்த் மற்றும் ராமேஷ்வர் டாகூர் ஆகியோர் ஊழலில் சம்பந்தப் பட்டிருப்பதாக நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்ததும், சீனி இறக்குமதி தொடர்பான ஊழலில்கல்பனாத்ராய் தொடர்புபட்டிருப்பதாக கூறப்பட்டு வருவதும் குறிப்பிடக் கூடியது

என்பதை ஒப்புக்கொண்டுதானாகவேண்டும்.

மகாநாட்டின் அகத்தே இந்த அரங்குகள் ஒவ்வொருவரின் திறனை வெளிப்படுத்துவதற்குப் பதிலாக எல்லாரும் இணைந்து ஏற்றதொரு முடிவெடுத்து இயங்கத் தொடங்கும் ''வளரும் தமிழியக்கம்'' என்ற நிலை இன்னும் வந்தபாடில்லை.

மாநாட்டினையொட்டி புறத்தே நடைபெறும் விழாக்கோலத்தில் அக்கறை காட்டப்படுவதில் தமிழனாகப் பிறந்தவனுக்கு மகிழ்ச்சி யில்லாமல் போகாது. ஆனால் அத்தகைய புறக்கோலத்தின் பொலிவு பாரீர் என்று காட்டுவதன் மூலம் ஐம்பது அறுபது கோடி ரூபாய் செலவு எனக் கணக்கு காட்டி தமிழ் எனும் போர்வையில் பெருச்சாளிகள் பங்கு போட்டுக் கொள்வதை எந்தத் தமிழ் மகன் ஏற்றுக் கொள்ள முடியும்எனவும்குறிப்பிட்டுள்ளார்

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994- 12 - 24**

**சனி இரவு**

08.01 - அறிவியற் கலசம்
08.10 - நிகழ்வும் பகிர்வும்
08.25 - நேயர் கடிதங்கள்
08.30 - செய்திகள்
08.40 - சித்திரம் - ந. கிருஷ்ணா எழுதிய 'போராடும் பெண்ணினம்'
09 00 மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

**1994- 12 - 25**

**ஞாயிறு காலை**

07.02 - மாவீர வணக்கம்
07.15 - களத்தில் மலர்ந்தவை
07.30 - செய்திகள்
07.35 - பத்திரிகைச் செய்திகள்
07.40 - களத்தில் மலர்ந்தவைநிகழ்ச்சியின் தொடர்ச்சி
08.00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள்யாவும் நிறைவுபெறும்

# செசன்யா மீது படைஎடுப்பு; ரஷ்ய ராணுவத்திற்குள் முரண்பாடு

## குண்டுவீச்சில் 27 பொதுமக்கள் பலி

(மொஸ்கோ)

செசன்யா மீது படையெடுப்பு மேற்கொள்ளப்பட்டதையடுத்து ரஷ்ய இராணுவத்திற்குள் பலத்த முரண்பாடுகள் எழுந்துள்ளன. இதனால் செசன்யா மீதான படையெடுப்பின் தலைமைப் பொறுப்பை ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் நேரடியாக ஏற்றுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

செசன்யா மீது ரஷ்ய விமானங்கள் தாழ்ப்பறந்து இரவு பகலாக குண்டுகளை வீசி வருகின்றன. அனேகமாக இடைவிடாது குண்டு வீச்சுகள் நடப்பதாகவும் இராணுவ நிலைகளை இலக்காகக் கொண்டே இக் குண்டுவீச்சுகள் இடம்பெறுவதாகவும் செசன்யாவிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. எனினும் ரஷ்ய விமானங்கள் வீசிய சில குண்டுகள் மக்கள் குடியிருப்புகள் மீது வீழ்ந்ததால் 27 பொதுமக்கள் பலியாகியதாக அறிவிக்கப்படுகிறது.

## தமிழ்மொழிமூல பயிலுனர் ஆசிரியர் பரீட்சை

தமிழ்மொழி மூல பயிலுனர் ஆசிரியர் பரீட்சைக்கு மன்னார் நகரப் பகுதியை பரீட்சை நிலையமாக தெரிவு செய்தவர்கள்- உரிய காலத்தில் பிரவேசப் பத்திரங்கள் கிடைக்கப்பெறாது விடின் உடனடியாக மன்னார் கல்வித் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளார்கள்.

இராணுவத்தின் கட்டுப்பாட்டிலில்லாத மன்னார் பெருநிலப் பரப்பிலிருந்து விண்ணப்பத்திலுள்ள பரீட்சார்த்திகள் நேரகாலத்துடன் தமது பரீட்சை நிலையங்களுக்கு வருகை தர இத்தகவல் தரப்பட்டுள்ளதாக மன்னார் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் இப்பரீட்சை புனித சவேரியார் ஆண்கள் மத்திய கல்லூரியிலும் - புனித சவேரியார் பெண்கள் மத்திய கல்லூரியிலும் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காங்கேசன் - திருமலை; நரோமா சேவையில்

(வடமராட்சி)

காங்கேசன்துறை திருகோணமலைக்கிடையிலான 'நரோமா' கப்பல் சேவை தற்பொழுது நடைபெற்று வருகிறது.

பயணிகளை ஏற்றி இறக்கும் இக்கப்பல் நேற்று முன்தினம் காலை காங்கேசன் துறைக்கு வந்து மாலை திருகோணமலைக்குச் சென்றது.

இக்கப்பல் திருகோணமலையில் இருந்து தீவகத்தைச் சேர்ந்த பயணிகளை ஏற்றி வந்து இறக்கிவிட்டு காங்கேசன்துறையில் இருந்து பயணிகளை ஏற்றிச் சென்றது.

கடல் கொந்தளிப்பு காரணம் காட்டி பருத்தித்துறைக்கான பயணிகள் சேவை தடைப்பட்டதும் தெரிந்ததே. (யோ)

## கசிப்பு வைத்திருந்தவர் காவல்துறையினரால் கைது

(யாழ்ப்பாணம்)

கசிப்பினை தம்வசம் வைத்திருந்த குடும்பஸ்தர் ஒருவர் தமிழீழ காவல்துறையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மானிப்பாய் பகுதியில் சில தினங்களுக்கு முன்னர் காவல்துறையினர் மேற்கொண்ட திடீர் நடவடிக்கையின் போதே மேற்படி கசிப்பு கண்டுபிடிக்கப்பட்டதாக காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந் நபரிடமிருந்து மூன்று லீற்றர் கசிப்பும் பறிமுதல் செய்யப்பட்டதாகவும், அவர் மீதான விசாரணைகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (22)

## தமிழக முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். நினைவு நாள்

தமிழக முன்னாள் முதலமைச்சர் அமரர் டாக்டர் எம் ஜி.ஆர் அவர்களின் 7-ம் ஆண்டு நினைவு நாள் விழா இன்றும் நாளையும் நாளை மறுதினமும்கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய திறந்த வெளியரங்கில் நடைபெறவுள்ளது.

அனைத்துலக எம்.ஜி.ஆர் பேரவைத் தலைவர் பொன். மதிமுகராசா தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் சிறப்புரைகள், பேருரைகள், விளையாட்டுப் போட்டிகள், கவியரங்கு, பட்டிமன்றம், கரகாட்டம், வில்லிசை, நாடகம் மற்றும் நடனம், மெல்லிசை போன்ற கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

## நவம்பர்மாத ஒளிவீச்சு இன்று காண்பிக்கப்படும்

நிதர்சனம் நிறுவனத்தின் நடைபெற்ற புலிகளின் குரல்

## சீர்கெட்ட நிலையில் வடமராட்சி வீதிகள்

[வடமராட்சி]

வடமராட்சியில் உள்ள வீதிகள் அனைத்தும் உடைந்து பாரிய குண்டும் குழிகளுமாக காணப்படுகின்றன.

பிரதான வீதிகள், சிறிய வீதிகள் அனைத்தும் பெய்து வந்த மழையையடுத்து சேதமடைந் துள்ளன. இவ் வீதிகளூடாக செல்லும்வாகனங்கள் துவிச்சக்கர வண்டிகள் உதிரிப்பாகங்கள் சேதமடைந்த நிலையில் ஆங்காங்கே தரித்து நிற்பதையும் காணமுடிகிறது.

பாடசாலைகளுக்கு முன்பாக மழைநீர் தேங்கி நிற்பதனால் பாடசாலைக்கு செல்வோர் வருவோருக்கும் அசௌகரியங்கள் ஏற்பட்டு வருகின்றன. இப் பகுதிவீதிகள் நீண்ட நாட்களாக திருத்தப்படாமல் இருப்பதினால் குழிகள் மேலும் உடைந்து வருகின்றன. [யோ]

## மெய்வல்லுநர் போட்டி

யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் ஏற்பாடு செய்து வரும் யாழ். மாவட்ட மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் பெப்ரவரி 4, 5 ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கின்றன.

ஆண், பெண் பிரிவுகளில் மொத்தம் முப்பது நிகழ்ச்சிகள் இப்போட்டிகளில் இடம் பெறும். வெற்றியீட்டும் வீரர்களுக்கு வெற்றிப் பதக்கங்களும் சான்றிதழ்களும், வெற்றிக்கிண்ணங்களும் வழங்கப்படும்.

ஜனவரி 20ஆம் திகதி வரை இப்போட்டிகளுக்கு விண்ணப்பிக்க முடியும் என யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் அறிவித்துள்ளது.

சங்கத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள கழகங்கள் ஊடாக அல்லது தனிப்பட்ட முறையில் வீரர்கள் இப்போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

## மட்டக்களப்பில் வெடிகளுக்கு தடை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் வாணவெடிகள், சீனவெடிகள் என்பவற்றை பயன்படுத்த வேண்டாம் என மட்டக்களப்பு பொலிசார் அறிவித்துள்ளனர். இத்தகைய வெடி வகைகள் விற்பனை செய்வதும் தடைசெய்யப்பட்டுள்ளது.

துப்பாக்கி வெடி சத்தத்துடன் இவற்றை வேறுபடுத்தி அறிய முடியாததால் இந்நடவடிக்கை எடுக்கப்படுவதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## கடன் வழங்கல்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய நிதியத்தினூடாக வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு கடனுதவிகளை வழங்கி வருகின்றது.

அந்த வகையில் கோப்பாய் வட்டத்தில் 30 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு கடந்த 13-ம் திகதி சிறுப்பிட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலையில் வைத்து ஒரு பயனாளிக்கு 10,000 ரூபா வீதம் மொத்தம் 3 இலட்சம் ரூபாவிற்கு சுயதொழில் முயற்சிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

## ஆதாரம் காட்டி பெறவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்-மானிப்பாய் வீதியில் கோம்பையன்மணல் மயானத்திற்கருகில் கிடந்த சுமார் ஒன்றரை பவுணிலான கைச் சங்கிலியொன்று ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சுவாம்பிள்ளை அன்ரனிராசன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு, தமிழீழ காவல் துறையின் யாழ் - பிராந்திய பணிமனையில் ஒப்படைக்கப்

## இஸ்ரேலிய ஹெலி தாக்கி 2லெபனான் பொலிசார் பலி

(பெய்ரூட்)

தெற்கு லெபனானில் இஸ்ரேல் படைகளுக்கும் ஹிஸ்புல் கெரில்லாக்களுக்கும் இடையில் தொடர்ந்து மோதல்கள் இடம் பெறுகின்றன. இஸ்ரேலிய ஹெலிக்கொப்டர் ஒன்று நடத்திய தாக்குதலில் இரு லெபனான் பொலிசார் பலியாகினர். முன்னதா ஹிஸ்புல் கெரில்லாக்களின் தாக்குதலில் இஸ்ரேலிய சிப்பாய் ஒருவர் பலியானார் ஐவர் காயமடைந்தனர்.

## அத்திலாந்திக் கடலை நீந்திக் கடக்க முயற்சி

நாற்பத்திரண்டு வயதுடைய பிரான்ஸ் நாட்டவரான கைடிலேக் என்பவர் 3,900 கிலோ மீற்றர் நீளமான அத்திலாந்திக் சமுத்திரத்தை நீந் கேப்வேர்டே தீவில் ஆரம்பித்து கரிபீன் தீவை சென்றடைவார். இச் சாதனையைப் புரிவதற்கு 60 தொடக்கம் 90 நாட்கள் எடுக்கும் என

## மரண அறிவித்தல்கள்



### வைரமுத்து வாசுதேவன் (வாசு)

(கட்டிட மேற்பார்வையாளர் கரம் நிறுவனம், கௌரவ பொருளாளர் ஸ்ரீ மீனாட்சி அம்பாள் சி.க.கூ.சங்கம்)

நீர்வேலி மேற்கு மாசிவனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி, வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரும், முன்னாள் ஆய்வு நிறுவன புத்தூர் பிரதேச இணைப்பாளரும் ஆகிய செல்வன் வைரமுத்து வாசுதேவன் 19-12-94 அன்று காலமானார். இவர் வைரமுத்து நாகரத்தினம் தம்பதிகளின் செல்வப் புத்திரனும், சேதுராசா (பாரெய்ன் பலராமன் (நாதன், உரிமையாளர் துர்க்கா பாடசாலை போக்குவரத்து சிற்றூர்தி சேவை), நாகேஸ்வரி, விஜயரங்கன், விஷ்ணு (டென்மார்க்), விஜயகுமார் (பாரெய்ன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், லதா, குகனேசன் (ஈழநாதம் வன்னிப்பதிப்பு) ஆகியோரின் உடன் பிறவாத சகோதரனும், இந்திராணி, தவமலர், காராளசிங்கம் (பாரெய்ன்), நாகேஸ்வரி, கணநாதன் (பொருண்மிய மேம்பட்டு நிறுவனம்) ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 21-12-94 இன்று காலை 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:

மாசிவன், நீர்வேலி மேற்கு. [10482]

அப்புத்துரை வைரமுத்து குடும்பத்தினர்.

### கதிரித்தம்பி சுப்பிரமணியம் (சொக்கர்)

அன்னார் கட்டுவன் தெற்கை வசிப்பிடமாகக் கொண்டவரும், நாகரத்தினம் அவர்களின் அன்புக் கணவரும் திருமகள், திருமாறன் ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்லமுத்து, செல்லாச்சி, கமலம், கண்மணி, சின்னம்மா, சரோஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், தேவதாஸனின் (ஜேர்மனி) அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (24-12-1994) காலை 9.00 மணியளவில் முருகையா அராலி வீதி சங்கானையில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:

சு. திருமாறன் (கோபு) (மகன்)

(10485)

### திருமதி பூரணம் வல்லிபுரம்

(வேலணை மேற்கு, வேலணை)

## இன்று காண்பிக்கப்படும்

நிதர்சனம் நிறுவனத்தின் மாதாந்த வெளியீடான 'ஒளி வீச்சு' வீடியோ சஞ்சிகையின் நவம்பர் மாதத்திற்கான ஒளி நாடா வெளிவந்து விட்டது.

- தமிழீழமெங்கும் உணர்வு பூர்வமாக நினைவு கூரப் பட்ட மாவீரர்நாள் நிகழ்வுகள்.
- வெற்றிலைக்கேணிக்கடற் பரப்பில் சிறிலங்கா கடற் படையினரின் தரையிறங்கும் போர்க்கப்பல் மீதான மேஜர் வித்தியின் கரும்புலித்தாக்குதல்.
- தேசியத்தலைவரின் ஆசிச் செய்தியுடன் இனிதே நடைபெற்ற புலிகளின் குரல் 4-ம் ஆண்டு நிறைவு விழா.
- 'சமகாலக் கண்ணோட்டம்' எனும் அரசியல் நோக்கு.
- 'வெள்ளைத்துணி' எனும் குறும்படம்.
- கலை நிகழ்ச்சிகள் என்பன வற்றோடு மேலும் பல வழமையான அம்சங்களோடு புதுப்பொலிவுடன் இம்மாத ஒளிவீச்சு வெளிவந்துள்ளது.

இவ் ஒளிநாடா இன்றைய தினம் பி. ப. 6. 00 மணிக்கு யாழ் ஸ்ரீதர் திரையரங்கில் இலவச காட்சியாக காண்பிக்கப்படவுள்ளது.

---

## யாழ் வன்னி தொடர்பு சேவை

யாழ்ப்பாணத்திற்கும் வன்னிப்பகுதிக்கும் செய்திகள் (தந்தி) பரிமாற்றம் செய்வதற்கு யாழ். ஆரிய குளம் சந்திக்கு அண்மையிலும், கிளிநொச்சி பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அருகாமையிலும் உள்ள கருமபீடங்களிலும், ஓமந்தை சோதனை நிலையத்திலுள்ள கருமபீடத்திலும் செய்திகள் ஏற்கப்படுகின்றன.

1. சலுகை செய்திகள் முதல்15சொற்களுக்கும் ரூபா 15/-ம் மேலதிக ஒவ்வொரு சொல்லுக்கும் ரூபா 2/-ம் அறவிடப்படும்

2. வழமைச் செய்திகள் முதல் 10 சொற்களுக்கு ரூபா 100/-ம் மேலதிக ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா 5/-ம் அறவிடப்படும்.

3. வியாபாரச் செய்திகள் முதல் 10 சொற்களுக்கு ரூபா 200/-ம் மேலதிக ஒவ்வொரு சொல்லுக்கும் ரூபா 15/-ம் அறவிடப்படும்.

(மேற் கூறப்பட்ட 1, 2ற்குரிய பதில் பெறுவதற்கு ரூபா100/-ம், 3ற்கு ரூபா 200/-ம் அறவிடப்படும்.)

**அவசர கட்டணம் அறவிடப்படும் மேற்குறிப்பிட்ட செய்திகள் உடன் விநியோகிக்கப்படும்.**

மேலதிக விபரங்களை அந்த அந்த கருமபீடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

(சி-10872)

---

துறையின் யாழ் - பிராந்திய பணிமனையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி இச் சங்கிலியைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்-பிராந்திய காவல் நிலையத்தினர் அறிவித்துள்ளனர். (22)

## மாவு, சீனி விநியோகம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு - நயினாதீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்கப் பாவனையாளர்களுக்கு இன்று சனிக்கிழமை தொடக்கம் கட்டுப்பாட்டு விலையில் சீனி, மாவு என்பன விநியோகிக்கப்படவுள்ளன.

சகல பாவனையாளர்களுக்கும் குடும்பம் ஒன்றிற்கு ஐந்து கிலோ வீதம் 8 ரூபா 50 சத விலையில் மாவும், 'உ' அட்டை உடைய குடும்பங்களுக்கு இரண்டு கிலோ வீதம் 32 ரூபா விலையில் சீனியும் சங்கத்தின் செம்மா தெருவில் உள்ள 15-ம் இலக்க கிளையில் வழங்கப்படும் என சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [22]

## ஒலிபெருக்கிகள் மீளவந்தன

சில்லாலை புனித யாகப்பர் ஆலயத்தில் திருட்டுப் போன நான்கு ஒலிபெருக்கிகள் இரு மாதங்களுக்கு உள்ளாக மீண்டும் திருடரால் ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்தன.

கடந்த ஒக்டோபர் மாதம் 22 ஆம் திகதி மேற்படி ஒலி பெருக்கிகள் ஆலயத்தில் இருந்து திருட்டுப் போயின.

இதன் பின்பு ஆலயத்தில் ஒலிபெருக்கிகளைத் திருடியோர் திரும்பவும் வைத்துவிடும்படியும் அல்லது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அறிவித்தல் பலகை வைக்கப்பட்டதை அடுத்து இம்மாதம் 18 ஆம் திகதி பிற்பகல் 2 ஒலி பெருக்கிகளும் 19 ஆம் திகதி காலை 2 ஒலி பெருக்கிகளும் ஆலயத்தில்மீளவும் வைக்கப்பட்டிருந்தன என்று தெரிவிக்கப்படுகிறது.

---

கைடிலேக என்பவர் 3,900 கிலோ மீற்றர் நீளமான அத்திலாந்திக் சமுத்திரத்தை நீந்திக் கடக்க எண்ணியுள்ளார்.

இந்த நீச்சலின் போது டைவார். இச் சாதனையைப் புரிவதற்கு 60 தொடக்கம் 90 நாட்கள் எடுக்கும் என ராய்டர் செய்தியாளர் தெரிவிக்கிறார்.

# மாலைதீவில் கைதாகிய 23 மீனவர் விடுவிப்பு

மாலைதீவு கைது செய்து வைத்திருந்த 23 சிங்கள மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். அண்மையில் சிறிலங்கா வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மாலைதீவு சென்று நடத்திய பேச்சுகளையடுத்து மாலைதீவுஅரசு இம்மீனவர்களை விடுவித்துள்ளது.

மாலைதீவுக் கடலில் இவர்கள் சட்டவிரோதமாக மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளை மாலைதீவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

# மூளைக்காய்ச்சல் பரவ பன்றிகளே காரணம்

என்ரபலைற்றிஸ் எனும் மூளைக்காய்ச்சல் பரவுவதற்கு பன்றிப் பண்ணைகளும் நுளம்புகளுமே காரணம் என பேராதனை பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ். பி. அமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு பல்கலைக் கழகத்தின் கருத்தரங்கில் பேசிய அவர் இக் கொடிய வைரஸ் பரவல் குறித்து ஜப்பானில் நடத்திய ஆய்வின் போது மேற்கண்ட முடிவு தெரியவந்ததாக கூறினார். நுளம்புகள் நோய் கிருமியின் காவிகளாக உள்ளன என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

---

### ஆசிரியர்

யர்கள் கவலை தெரிவித்துள்ளனர்

தென் பகுதியில் கடந்த 15ந்திகதியளவில் ஆசிரியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ள நிலையில்யாழ். கல்வித்திணைக்களத்தின் அசமந்த போக்கினால் தடையேற்பட்டுள்ளதாக வேதனை கொண்டுள்ளனர்.

---

### விண்ணப்பப் படிவம்

திச் சங்கம், மாதர் சங்கம் என்பன அல்லாத ஏனைய சகல அமைப்புகளும் தங்கள் அமைப்பின் யாப்புப் பிரதி ஒன்றினையும், சிறிலங்கா அரசாங்கத்திற் பதிவு செய்யப்பட்டிருப்பின் அவர்களால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ்ப் பிரதி ஒன்றினையும் விண்ணப்பத்துடன் இணைத்து ஒப்படைக்குமாறும் தமிழீழ நிர்வாக சேவையினர் கேட்டுள்ளனர்.

---

### கொழும்பு

தெரிவித்தார். இதேசமயம் பல்கலைக்கழகம் அருகே மக்கள் வங்கி 80 லட்சம்ரூபா செலவில் 25 அறைகொண்டதாக புதிய விடுதி ஒன்றை அமைக்கவுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

---

### பாஜ்களின்

புதிய பாஜ்களையும் தருவிக்க கூடவே நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியமுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

(இ) (நி)

---

## திருமதி பூரணம் வல்லிபுரம்

(வேலணை மேற்கு, வேலணை)

அன்னார் வேலணை எட்டாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பேச்சியம்மன் வீதி கோப்பாய் தெற்கை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற வல்லிபுரத்தின் அன்பு மனைவி திருமதி பூரணம் வல்லிபுரம் இறைவனடி சேர்ந்துவிட்டார். அன்னார் அன்னம்மா, கனகரெத்தினம், சபாரெத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாக்கியம், இரத்தினாம்பாள் (கனடா), சுந்தரவல்லி (லண்டன்), அமிர்தவல்லி (மாங்குளம்), பகவதி (இந்தியா), தருமலெட்சுமி, மங்கையற்கரசி (வவுனியா), வாலாம்பிகை, குகனேசபிள்ளை (கனடா), கந்தவேள் (கனடா), விமலாதேவி (ஜேர்மனி), காலஞ்சென்ற வசந்தாதேவி (மாங்குளம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், இராசதுரை (கொழும்பு), காலஞ்சென்ற மயில்வாகனம், இராசரெத்தினம் (லண்டன்), கனகரெத்தினம், நாகலிங்கம் (இந்தியா), அருமைநாயகம், செவ்வேள் (வவுனியா), சிவலிங்கம், சந்திரகுமாரி (கனடா), சாந்தலெட்சுமி (கனடா), யோகச்சந்திரன் (ஜேர்மனி), இராசேஸ்வரன் (மாங்குளம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24-12-94) முற்பகல் 11. 00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
S. சிவலிங்கம்
(மருமகன்)

பேச்சியம்மன் கோவிலடி,
இருபாலை. (10488)

---

## சின்னத்தம்பி திருவிளங்கம்

(இளைப்பாறிய பெருந்தெருக்கள் திணைக்களம்- P.W.D Overseer)

மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி திருவிளங்கம் 23-12-94 அன்று கோண்டாவிலில் காலமாகிவிட்டார். இவர் இரத்தினமலரின் அன்புக் கணவரும், திருமதிகள் சந்திரவதனா தியாகலிங்கம், அமிர்தவதனா மகேஸ்வரன் (அவுஸ்திரேலியா), ஜெயச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற திருமதி நல்லம்மா, கந்தையா, இரத்தினம் பொன்னுத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதிகள் பரிபூரணம் சுப்பையா, தனலெக்ஸ்மி சண்முகராஜா, அருந்ததி பரராஜசிங்கம், புனிதவதி வேலாயுதம், சந்திரசேகரம், தர்மராசா, காலஞ்சென்ற இராஜசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 24-12-94 (சனிக்கிழமை) இன்று காலை 11.00மணிக்கு நடைபெற்று, கோண்டாவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும், இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
வே. சிவசீலன்

சின்னத்தம்பி திருவிளங்கம்
ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில் கிழக்கு. (10481)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது